# இறையியல் கோலங்கள்

வடிவம் 3

வண்ணம் 1

சித்திரை 83



# ஒப்புரவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறையியல் கோலங்கள்

(பருவ இதழ்)

வடிவம்: 3 சித்திரை 1983 வண்ணம்: 1

வெளியிடுவோர்:

**ஞானப்பிரகாசர் தமிழ்க் கழகம்**

தேசிய குருத்துவக் கல்லூரி

அம்பிட்டி

கண்டி

(தனிப்பட்ட விநியோகத்திற்கு மட்டும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியர் குழு

**பொறுப்பாசிரியர்கள்:**

அருள்திரு. சீ. யோ. இம்மானுவல்
அருள்திரு. விக்ரர் குரூஸ் அ. ம. தி.
அருள்திரு. ஜே. நீக்கலஸ்
அருள்திரு. அல்போன்ஸ் பேர்ணுட்

**தொகுப்பு:**

ம. ஜெரோ செல்வநாயகம்
ய. தேவசகாயம்
இ. ஸ்டாலின்
ம. ரூபன்
ஜெரூட் செ. சவிரிமுத்து
அ. சகாயதாசன்
வீனஸ் சொய்சா அ. ம. தி.
எஸ். செபஸ்ரியன் அ. ம. தி.

**அச்சிடலாம் :**

''இறையியல் கோலங்கள்'' இல் வெளிவரும் கருத்துக்கள் கிறிஸ்தவக் கோட்பாடுகளுக்கு எதிரானவை அல்ல என்பதேயன்றி, இதுதான் திருச்சபையின் போதனை என்பதற்கில்லை.

\+ **போல் பெரேரா**
கண்டி மறைமாவட்ட ஆயர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உட்புகுமுன்

# ஒப்புரவுப்பணி

அண்மையில் உரோமையில் இடம்பெறவுள்ள அனைத்துலக ஆயர் பேரவையில் 'ஒப்புரவுப் பணியும் நாமும்' என்ற கருப்பொருள் ஆராயப்படவுள்ளது. இச்சந்தர்ப்பத்தில் எமது தமிழ்க்கிறிஸ்தவர்களும் தமது ஒப்புரவுப் பணிபற்றிச் சிந்தனைத் தெளிவு பெறவும், வாழ்க்கை அனுபவத்தைப் பெறவும் ஏதுவாக, இலங்கை விவிலிய மறைக்கல்வி தமிழ்ப் பிரிவு ஆணைக்குழுவினர் இப்பொருள்பற்றித் தேசிய ஆய்வரங்கு ஒன்றை மடுத்திருப்பதியில் ஏற்பாடு செய்திருந்தனர்.

ஆழ்ந்த பல உண்மைகள் எளிய படிமுறைகளில் விளக்கப்பட்டுக் கலந்துகொண்டோர் அனைவருக்கும் திருப்தியளிக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த ஆய்வரங்கு பொதுநிலையினரின் இறையியல் பாடநெறிபோன்று அமைந்திருந்தது.

இதில் படிக்கப்பட்ட உரைகள், தமிழ்க் கிறிஸ்தவர்கள் அனைவரையும் சென்றடைந்து அவர்களின் சிந்தனைத் தெளிவுக்கும் ஆழமான இறையனுபவத்திற்கும் உதவும் வகையில் இவற்றைத் தொகுத்து ஒரு சிறப்பிதழில் வெளியிட நாம் முனைந்தோம். இதற்குத் தமது முழு அனுமதியையும் அளித்த மேற்படி ஆணைக்குழுவினருக்கு எமது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவிக்கின்றோம்

அட்டைப்படத்திற்கென, ஆய்வரங்கின் கருப்பொருளை தெளிவாக, எழில்மிகு அமைப்புடன் உருவாக்கித்தந்த ஆசிரியர் ரமணியை நாம் பாராட்டாமல் இருக்கமுடியாது.

ஆய்வரங்கில் கலந்துகொண்டு, வழங்கப்பட்ட உரைகளை பிரசுரத்திற்கென எழுத்துருவில் எமக்கு ஆக்கித்தந்தவர்கள் யாழ். மறைமாவட்ட அருட்சகோதரர்களாவர். சிரமம் மிகுந்த இப்பணியை பூரிப்புடன் நிறைவேற்றிக் கொடுத்த அவர்களுக்கு எமது உளமார்ந்த நன்றி.

ஆசிரியர்குழு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளே


1. முகவுரை

2. இன்றைய உலகில் பாவம்

3. இறைவன்—தன் மக்களை மன்னிக்கும் தந்தை

4. யேசுக்கிறிஸ்து மனிதனை இறைவனோடும், மனிதரோடும் ஒப்புரவாக்குபவர்

5. திருச்சபை ஒப்புரவின் அருட்சாதனம்

6. வரலாறு கூறும் உண்மைகள்

7. பாவசங்கீர்த்தனம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருள்திரு எஸ். ஜே. இம்மனுவேல்
### வழங்கிய
# முன்னுரை

இலங்கையின் எல்லா மறை மாவட்டங்களிலுமிருந்து தமிழ் மக்கள் ஒன்றுகூடித் தமிழ்த் தேசிய ஆய்வரங்கு ஒன்றை முதன்முறையாக நடாத்துவது மகிழ்ச்சிக்குரியதும் வரவேற்கப்பட வேண்டியதுமாகும். இது அறிவின் ஆய்வரங்கு மட்டுமல்ல அனுபவ ஆய்வரங்குமாகும். எனவே புதிய கொள்கைகளையும், கருத்துக்களையும் கண்டுபிடிப்பதற்கல்ல, இறைமக்களாகிய எம்மத்தியில் இக்காலத்தின் அறிகுறிகள் மூலமும், செயல்களின் மூலமும் இறைவன் எமக்கு உணர்த்துவதைப் புரிந்துகொண்டு எம்மில் புதுப்பித்தலை ஏற்படுத்தவுமே இவ்வாய்வரங்கு உதவவேண்டும்.

ஆய்வின் கருப்பொருள் 'ஒப்புரவுப் பணியில் இறைவனும் நாமும்' என்பதாகும். இறைவன் மனிதனுடன் ஒப்புரவை ஏற்படுத்தும்போது தனித்து அவர் மட்டுமல்ல, மனிதர் அனைவரது ஒத்துழைப்பும் நிலவும் போதுதான் அந்த ஒப்புரவுப்பணி நிறைவு பெறமுடியும். எனவே எமது முழு ஒத்துழைப்பை நல்குவது இன்றியமையாததாகும்.

இந்த ஆய்வரங்கு எமது செபத்திற்கும் தியானத்திற்கும், வழிபாட்டிற்கும் பேருதவியாக விளங்கும் என்பது எமது நம்பிக்கை. கடந்தகால மனப்பான்மையை முற்றாக மாற்றிவிடவோ, முன்னைய அமைப்புக்களைக் கண்டிப்பதற்கோ இது ஏற்படுத்தப்படவில்லை. மாறாக, நாம் ஒவ்வொருவரும் பொறுப்புள்ளவர்களாகவும் உண்மையை ஏற்கும் மனப்பாங்குடனும் வளருவதற்கும் இதுஏதுவாக அமையவேண்டும்.

## எந்தச் சூழ்நிலையில், எதற்காக?

★ இந்த வருடத்தை மீட்பின் யூபிலி ஆண்டாக (1950 ஆண்டுகள்) நாம் கொண்டாடுகின்றோம். இதற்கான எமது ஏற்பாடுகள் யாவும் புறஆடம்பர நிகழ்ச்சிகளுடனும், திருயாத்திரைகளுடனும் நின்றுவிடாது மீட்பின் பொருளை ஆழ அறிந்து ஏற்றுக்கொள்ளவும், அக்கொடையை நன்றியுள்ளத்துடன் என்றும் நினைவுகூரவும் எம்மை உருவாக்கிக்கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ உரோமையில் அனைத்துலக ஆயர் பேரவையிலும் இதேபொருள் ஆய்வு செய்யப்படுவதினால், நாமும் ஒப்புரவாகுதல்பற்றிச் சிந்தனைத் தெளிவுபெறுதல் சாலச் சிறந்தது

★ கிறிஸ்தவமல்லா மறைகளைச் சார்ந்த பெரும்பான்மை மக்கள் வாழும் எமது சூழலில், மீட்பின் அருளை நமக்கென மாத்திரம் வைத்திராது. எவ்வாறு பிறருடன் பகிர்ந்துகொள்ளலாம்? எவ்விதம் செயற்படலாம்? என்பதைச் சிந்திக்கவேண்டியது எமது தலையாய கடன்.

★ இன்னும் சில வருடங்களில் நாம் 2000 ஆண்டில் காலடி வைத்தவர்களாவோம். மாறிவரும் உலகில், எந்த உருவில், எவ்வழிகளில் மீட்பின் அருள் மனுக்குலத்திற்கு அளிக்கப்பட்டுள்ளது என்பதையும், அவ்வருளை எத்தகைய புதிய முறைகளில் நாம் எதிர்காலத் தலைமுறையினருக்கு வழங்கலாம் என்பதையும் நாம் அறியவேண்டியவர்கள் என்று திருத்தந்தை எம்மிடம் கூறுகின்றார்.

## ஒப்புரவு அருட்சாதனம்

இன்று ஒப்புரவு அருட்சாதனம் எந்தளவுக்கு மக்கள் மத்தியில் கொண்டாடப்படுகிறது என்பதை நாம் உணரல்வேண்டும். 2-ம் வத்திக்கான் சங்கத்தின் பின்பு ஒப்புரவு அருட்சாதனத்தை நிறைவேற்றுவதில் கணிசமான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஒருசாரார் இந்த அருட்சாதனம் மக்கள் மத்தியில் போதியளவு கொண்டாடப்படுவதில்லை, பகிரப்படுவதில்லை, மக்கள் அதில் அக்கறையற்றவர்களாகவுள்ளனர் என்றும், இன்னொரு சாரார் குருக்கள் இதில் கவனம்செலுத்துவதில்லை என்றும், வேறுசிலர் இவ்வருட்சாதனம் என்ன பொருளைக்கொண்டுள்ளது? இது அவசியமா? நற்கருணைக்கும் ஒப்புரவுக்கும் உள்ள தொடர்பு என்ன? என்றும் பலவித ஐயங்களை எழுப்புகின்றனர்.

## அரங்கின் அமைப்பு

இன்று எமது முற்காலத்தைய மறைக்கல்வி அறிவைப் புதிய கண்ணோட்டத்தில் புத்துணர்வுடன் சிந்திக்கவேண்டும். இந்தப் பின்னணியில் நோக்கின், இந்த ஆய்வரங்கு இத்துடன் இங்கேயே முடிவடைவதற்கல்ல, பல ஆய்வுகளுக்கு ஆரம்பமாகவும், ஆயத்தமாகவும் ஊன்றுகோலாகவும் விளங்கவேண்டும்.

திருச்சபை இதுவரைகாலமும் கற்பித்தது என்ன? அது கடைப்பிடித்தது என்ன? இதனால் எத்தகைய மாற்றங்கள் எவ்வித தவறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் ஏற்பட்டன என்பதனைத்தையும் நாம் அலசி ஆராய்ந்து ஒரு நீண்ட கால நோக்கின் அடிப்படையில் மாற்றங்களை ஏற்படுத்த முயலல்வேண்டும். இதற்கு உறுதுணையாகத்தான் இந்த ஆய்வரங்கின் உரைகள் அமைகின்றன.

i. எம்மைச் சூழ்ந்துள்ள உலகில் பாவம் எவ்விதத்தில் படர்ந்துள்ளது? அதன் புதிய உருவங்கள் யாவை? அதன் விளைவுகள் எவை? எவையெவையெல்லாம் பாவங்களாகும் என்பதை முதலில் விளங்கிக் கொள்ளல்வேண்டும்.

ii. கிறிஸ்தவர்களாகிய எமக்கு இறைவெளிப்பாடு எதைக் கற்பிக்கின்றது? கடவுள் இரக்கம் நிறைந்த இறைவனுவார். எனவே நமது எண்ணங்களில் அவரைப் பயமுறுத்துபவராக, நீதித்தீர்ப்பு வழங்குபவராக மட்டும் கருதாது, அவரது இரக்கத்தையும் பரிவையும் நமது வாழ்வில் உணரவேண்டும்.

iii. கிறிஸ்து, இரக்கமுள்ள பிதாவின் அருட்சாதனமாக நம் அனைவருக்கும் மீட்பைக் கொணர்ந்தார். அவர் மனிதரை இறைவனோடும், மற்ற மனிதரோடும் உறவுகொள்ளச் செய்ய வந்தார்.

iv. கிறிஸ்து ஆரம்பித்த இறையரசினதும் மீட்பினதும்அடையாளமாகவும், அருட்சாதனமாகவும் விளங்கும் திருச்சபையின் இன்றியமையாத பணியும் இந்த ஒப்புரவை ஏற்படுத்துவதேயாகும். இது திருச்சபையின் பக்கப்பணியல்ல, ஆனால் மையப்பணியாகவே அமைகின்றது.

v. மனிதர் மத்தியில் இவ்வொப்புரவுப்பணி வரலாற்றில் எவ்வாறு வளர்ந்து வந்துள்ளது என்பதை நாம் அவதானிக்கவேண்டும். புதியனவற்றை முழுமையாக விளங்கிக்கொள்வதற்கு வரலாறுதான் ஓர் உண்மையான ஆசிரியனாக விளங்கமுடியும். இதன்வழி நின்று இன்றைய நிலையை நாம் விளங்கிக்கொள்வது மட்டுமன்றி எதிர்கால நிலைமைகளையும் சரியான போக்கில்கொண்டு செல்லவேண்டும்.

இன்று வத்திக்கான் சங்க ஒளியிலே ஒப்புரவு அருட்சாதனம் அர்த்தமுள்ளதாக மிளிர்கிறது. ஆயினும் எம்மத்தியில் அருகிவரும் இவ்வருட்சாதனத்தை, அதன் உட்பொருளையும் அதைக் கடைப்பிடிப்பதில் எழும் குறைநிறைகளையும் தெரிந்துகொள்வதுடன், இறைவனின் இரக்கத்தை இன்று எம்மக்கள் முழுமையாகக் கொண்டாட உதவும்வகையில் நாம் எவ்வாறு செயற்படலாம் என்று ஆராய்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய உலகில் பாவமும் அதன் பன்முக உருவங்களும் விளைவுகளும்

—அருட்திரு ஏ. ஜே வி சந்திரகாந்தன்

நாம் ஆரம்பித்திருக்கும் இந்த யூபிலி ஆண்டிற்கான மையக் கருத்தாகவும், இவ்வாண்டின் இறுதியிலே உரோமையில் நடைபெற இருக்கும் ஆயர்கள் பேரவையின் ஆய்வுப்பொருளாகவும், ஒப்புரவாகுதல் என்ற பதமும் அதைஉணர்த்தும் கருத்துக்களும் அதை நடைமுறைப் படுத்துவதிலுள்—நாம் எதிர்நோக்கும் பிரச்சனைகளும், திருச்சபை நிறைவேற்றும் ஒப்புரவாகுதல் அருட்சாதனத்தின் பின்னணியில், தீர்க்கமாக ஆராயப்படும் என்பதையும்—நாம் அறிவோம். குடும்பம், பங்கு, மறைமாநிலம், நாடு, உலகம் என்ற வகையிலே அமைக்கப் பெற்று இயங்கிவரும் திருச்சபையானது ஒப்புரவாகுதல் வாழ்க்கையை வாழ்வதற்கு பாவமும் அதன் பன்முகநிலைகளும், விளைவுகளும் எவ்வாறு தடையங்களாகின்றன என்பதனை முதலிலே இனங் கண்டுகொள்ளுதல் அவசியமானது. வல்லரசு நாடுகளுக்கிடையிலான போட்டிகளும் அளவற்ற அணுவாயுதக் குவிப்புகளும, ஆறுதபு ற்றுநோயாய் ஆழ வேரெடுத்துவரும் வன்முறைக் கிளர்ச்சிகளும், பொருளாதார ஏற்றத் தாழ்வுகளும் வளர்முக நாடுகளைப் பயமுறுத்தும் பணவீக்கமும் இன்னும் சமுதாயத்தில் சாதாரணமாக்கப்பட்டுவரும் வர்க்கப் பிரிவினைகள், வகுப்புவாத பேதங்கள், சாதிக்கொடுமைகள், இனம், நிறம், மொழி குலம், மதம் என்ற நிலையிலே வளர்க்கப்படும் பிரிவினைகளும், நாம் வாழுகின்ற யதார்த்த உலகானது ஒற்றுமையை விடுத்து வேற்றுமையையு, பிரிவினையையும் பல்வேறு வழிகளிலும் வகைகளிலும் வளர்த்து வருகின்றதென்பதை எமக்குச் சுட்டிக்காட்டுகின்றன இவ்வுண்மை கசப்பானதேயெனினும் இதில் அபிப்பிராய பேதமில்லை.

இன்னும் சமூகத்தொடர்பு சாதனங்களிலும் போக்குவரத்து முறைகளிலும் நாடுகளுக்கிடையில் ஏற்பட்டிருக்கும் பண்பாட்டுக் கலவைகளும், சேர்வைகளும் மக்களுக்கிடையிலே காலங்காலமாக மரபுவழியிலே காக்கப்பட்டு வரும் அடிப்படை விழுமியங்களில் பெருமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளன. இம்மாற்றங்களின் விளைவு நன்மையானதா? தீமையானதா? என்பதனைப் பின்னர் கணிப்போம். ஆனல் இக்கலாச்சார மாற்றமானது குடும்ப, சமூக, சமுதாய விழுமியங்களில் அடிப்படையாள மாற்றத்தினைத் தருவித்திருக்கிறதென்பது அனைவராலும் ஏற்கப்படுவதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து 17-ம் நூற்றுண்டின் இறுதிக்காற்பகுதியிலிருந்து பரிண பித்துவரும் தத்துவப் போக்குகளை பரிசோதித்தால் ஆங்கு தனிமனித விடுதலைக் குரலும், சுயநிர்ணயப் போக்கும், முளைவிடுவதனை அவதாணிக்கலாம். இத்தத்துவ நிலைகளின் கிளைகளாகவே மனுமுதற் கொள் கைகளும், மானிடக் கோட்பாடுகளும், பொதுவுடமைச் சித்தாந்தங் களும், ஏனைய மனுமுதல் அறநெறிக் கோட்பாடுகளும் வளர்ந்தன வென்பதை நாம் காண்கிறோம்.

மேற்கூறியவை அனைத்துமே சமுதாயத்தின் பரிணும வளர்ச்சிப் போக்கையும் அதன் இயக்க நிலைப்பாட்டையும் உறுதிப்படுத்துகின்றன.

எனவே, இத்தகைய இயக்கவியல் அடிப்படையில் சமுதாயத்தைக் கூர்ந்து நோக்கி, அதன் வளத்தைக் கணக்கிட்டு அதன் புதிய வளர்ச் சிப் போக்கின் அடிப்படையிலேயும் இவைபோன்ற ஏனைய மனித, சமூக, உலகப் பிரச்சினைகளின் ஒளியிலுமே பாவம் ஒப்புரவாகுதல் என்ற பதங்களின் பொருளும் நிலையும், கருத்தும் களமும் ஆராயப் படல் வேண்டும்.

இன்றைய உலகில் பாவம் எவ்வாறு தனிமனிதனை, முழுக்குழு மங்களை (Communities) சமுதாயங்களை, நாடுகளைப் பாதிக்கின்றது, அவற்றிற்கிடையில் வேற்றுமைகளை, பிரிவினைகளை வளர்க்கின்றது, அநீதிகளைக் கொடுமைகளை, ஒடுக்கு முறைகளை, மோசடிகளை, சுரண் டல்களை நிலைபெறச் செய்கிறது என்பவற்றை சரியாக நாம் உணர்ந்து கொள்ளவும், இவை எங்ஙனம் கிறிஸ்தவ குடும்ப குழும ஒப்புரவா குதலைத் தலைகுனியச் செய்யும் சிறுமைத் தனங்கள் ஆகின்றன என் பதைச் சரியான, நேரியமுறையில் நிர்ணயிப்பதற்கும் பாவம் மூன்று முக்கிய நிலைகளில் ஆராயப்படவேண்டும்.

அதாவது பாவம் தனிமனிதனைப் பிளவுபடச் செய்கின்றது. மனி தனுக்கும் சமுதாயத்திற்கும், கிறிஸ்தவன் என்றமட்டில் கிறிஸ்தவனுக் கும் திருக்கூட்டத்திக்குமிடையில் நிலவும் உறவினை ஊறுபடுத்துகிற தென்பதையும், இறுதியாக மனிதனுக்கும் இறைவனுக்குமிடையிலான நல்லுறவைத் துண்டித்து விடுகிறதென்பதையும் திருநூலின் ஒளியில் தெளிதல் அவசியம்.

இதனை அழுத்திக் கூறுவதாயின் ''பாவம்'', சமுதாயத்தின் முனைப் பான எதிரியாக, மனித வர்க்கத்தின் வளத்தையும் வளர்ச்சியையும் பாதித்து, சிரழித்து நிலைகுலையச் செய்யும் இயக்கநிலைத் தன்மையுடைத் தான தீய சக்தியென்பதையும் தெளிவாக இனங்கண்ட பின்புதான் பாவத்தை அகற்றுவதற்கான வழிமுறைகளைக் கண்டு தெரியலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மறை நூலில் பாவ அநுபவம்

மறைநூலில் பாவ உணர்வும் செயல்நிலை அனுபவமும் அதன் துன்பியல் விளைவுகளும் வடிக்கப்பட்டிருக்கின்றன. ஆயினும் பழைய புதிய ஏற்பாடு என்று பிரித்துப்பார்க்கின்றபோது, பழைய ஏற்பாட்டில் இறைவனின் தெரிவும் யூதர்களுக்கு விடுத்த அழைப்பும் அவர்களோடு ஆண்டவர் செய்துகொண்ட உடன்படிக்கையும் உடன்படிக்கையோடு சேர்த்து அவர்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதியும், அங்கு முதன்மையும் முக்கியத்துவமும் பெறும் கருத்துக்களாகவும் எமக்குத் தரப்பட்டு இருக்கின்றன. ஆகவே பழைய ஏற்பாட்டின் மையமும் உச்சக்கட்டமுமாக அமைந்திருக்கின்ற உடன் படிக்கையின் வாக்குறுதியின் ஒளியிலேதான் பாவமும் பாவத்தின் பயங்கர இருட் கறையும் சித்திரிக்கப்பட வேண்டும். இறைவனைப் பற்றிக்கொண்ட உணர்வும், அனுபவங்களும் அந்த உணர்விலும் அனுபவத்திலும் ஏற்படும் வளர்ச்சிப் படிகளும் பல்வேறு நாடுகளைப் பொறுத்தவரையிலே கோத்திரங்களை, சமுதாயங்களைப் பொறுத்தவரையிலே வேறுபட்டதாக அமைந்திருப்பதை மறை வரலாறுகளில் நாம் காண்கின்றோம். இந்துசமய வரலாற்றிலே தமது அகநிலையின் ஆழத்தில் அவர்கள் இறைவனை அனுபவித்து உணர்ந்தார்கள். இந்துசமய மறைநூல்களின், ஆகமங்களில் அடிப்படையிலே தேங்கி இருக்கும் பக்திப் பெருக்கம் இந்தஉள்ளுணர்வு அனுபவத்தை இறைவன் தமதுஉள்ளத்தின் அடி ஆழத்தில் முனிவர்களும் ஞானிகளும் எவ்வாறு உணர்ந்தார்கள் என்பதை எமக்கு விளக்குகின்றது. அதே போன்று இஸ்ராயேலரின் இறை உணர்வும், இறைவனோடு கொண்டிருந்த உறவும், இறை அனுபவமும் இன்னொருவகை நிலையினை எமக்கு உணர்த்திக் காட்டுகின்றன. இஸ்ராயேலரின் சமயமும் அவர்களின் கால நிரைப்பட்ட வரலாறும் மிகவும் நெருக்கமாக பிணைந்திருப்பதை நாம் அவதானிக்கின்றோம். இஸ்ராயேல் குலத்தாரின் ஆரம்பமும், இறைவன் அவர்களோடு செய்துகொண்ட உடன்படிக்கைகளும், எகிப்திய அடிமைத்தனமும், வனாந்திரத்திற்கு கடந்து சென்றமையும், சீனாய் மலையிலே சட்டநாதனாக இறைவனை அனுபவித்த முறைமையும் பலஸ்தீனத்தைக் கைப்பற்றியமையும், அரசர்களையும் ஆலயத்தையும் ஏனைய நிறுவன அமைப்பு முறைமைகளை வளர்த்துக்கொண்ட நிலையும், பபிலோனிய அடிமைத்தனையும் அதன்பின் விடுதலையும் அந்தியோக்கிய கலாபனைகளும் தொடர்ந்து வந்த உரோமையர்களின் அதிகாரத்திற்கு உட்பட்டமையும் இவை அனைத்திலுமே அவர்கள் இறைவனை ஒரு விடுதலை வீரனாக, மக்களின் துன்ப துயர்களை, கண்ணீர்களை துடைக்க வந்த விடுதலை நாயகனாக உணர்ந்தார்கள். ஆகையினாலேதான் இஸ்ராயேலரைப் பொறுத்தவரையிலே என்றுமே இறைவன் அவர்களுக்கு முடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வான ஒரு விடுதலையைக் கொடுக்கக் காத்திருக்கின்ற ஒருவராக, முடிவான விடுதலையை வாக்களித்த ஒருவராகக் கொள்ளப்படுவதனை நாம் பார்க்கின்றோம். எனவேதான் இந்தப் பின்னணியிலே பாவம் எத்தகைய மனப்பாங்கில் அவர்களால் கொள்ளப்பட்டது என்பதைப் பார்க்கும்போது, முதலாவதாக பாவம் இறைவனோடு செய்துகொண்ட உடன்படிக்கையின் அத்துமீறலாகச் சுட்டிக் காட்டப்படுகிறது பாவம் என்ற பதம் அங்கு பல்வேறு கருத்துப்பட உபயோகிக்கப்பட்டதை நாம் காணலாம். பழைய ஏற்பாட்டிலும் சரி புதிய ஏற்பாட்டிலும் சரி பாவம் என்ற பதம் எவ்வாறு உணர்த்தப்படுகின்றது என்பதைப் பார்க்கும்போது அங்கே 'குறி தவறுதல்', 'இலக்குத்தவறுதல்', 'குறிக்கோளில் நின்றும் விலகுதல்' போன்ற கருத்துக்களிலே தான் பாவம் விளக்கப்படுகின்றது. கடவுளுக்கு எதிராக தீமை புரிதல் குற்றம் செய்தல் தவறு இழைத்தல் உடன்படிக்கையினின்றும் விலகி பிரிந்து வாழ்தல், உடன்படிக்கைக்கு எதிராக செயல்படுதல் இவைபோன்ற பல கருத்துக்களிலே, பன்முகப்பட்ட நிலையிலே பாவம் பழைய ஏற்பாட்டிலே விளக்கப்படுகிறது. நான் முன் குறிப்பிட்டது போல பழைய ஏற்பாட்டு இறைவாழ்க்கையின், சமூகவாழ்க்கையின் அடிப்படையாக உடன்படிக்கை அமைந்திருந்ததாலே இவ் உடன்படிக்கை இரு நிலைகளிலே கொள்ளப்படுகிறது. இறைவனோடு ஒரே குலமாக ஒரேமக்களாக இஸ்ராயேல் மக்கள் அனைவருமே ஒரேஉடலாக சேர்ந்த நிலையிலே இறைவனோடு ஒரே மனத்தோடும் ஒரே உள்ளத்தோடும் அவர்கள் உடன்படிக்கைசெய்து கொண்டமையினாலே, இறைவனுக்கும் மக்களுக்கும் இடையிலே உடன்படிக்கை ஆழமான ஒரு உறவைச் சுட்டிக் காட்டுகிறது. அதேபோல் இறைவனோடு ஒரே உள்ளத்தினோடும், மனத்தோடும் இவ் உடன்படிக்கையைச் செய்து கொண்டமையினால் இவ் உடன்படிக்கையானது மக்கள் அனைவரையுமே ஒரே குடும்பமாக, ஒரே குழுவாக, ஒரே சமூகமாக, புதிய உறவிலே வாழும் அரச குருத்துவத் திருக்கூட்டமாக ஆக்குகிறது. ஆகையினாலே இந்த இரண்டு உறவுகளுக்கும் எதிராகப் புரியும் எந்த செயலும், இந்த இரண்டு உறவுகளையும் பலவீனப்படுத்தும் எந்தத் தவறும் பாவமாக அங்கே கொள்ளப்படுவதை நாம் பார்க்கின்றோம். உடன்படிக்கையின் இறைவனால் பாவம் வெறுக்கப்படுகிறது. சில வழிபாடு முறைக அகற்றப்படவேண்டும் என்றும் அனைத்துப் பாவங்களுக்கும் அதுவே காரணி என்றும் கொள்ளப்படுகிறது. புரட்சி, அகங்காரம் தவறு என்ற கருத்துப்படவும் பாவம் விளக்கப்படுகிறது.

இறைவனை விடுதலை வீரனாக அனுபவித்தமையினால் பாவம், தீமை போன்றமை அடிமைத்தனத்தின் அச்சுறுத்தல்களாகக் கொள்ளப்பட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டன. தமது அரசியல்; சமூக பொருளாதார வாழ்வில் காலத்துக்குக் காலம் ஏற்பட்ட அடிமைத்தனமானது தங்களது மூதாதையரினதும் தங்கள் சொந்தப் பாவங்களினதும் விளைவாகவே அவர்களால்கணிக் கப்பட்டது.

புதிய ஏற்பாட்டிலே கிறிஸ்துவினுடைய போதனையினதும் வாழ்க் கையினதும் அதனைத்தொடர்ந்த அப்போஸ்தலிக்க காலத்தின் நிலை மாறாக் கருத்தாகவும் கையாளப்படுவது ''மனந்திரும்பலும் விண்ணர சும்'' என்பதனை யாம் அறிவோம். ''காலம் நிறைவேறிவிட்டது கடவுளின் அரசு நெருங்கிவிட்டது. எனவே மனந்திரும்பி நற்செய்தியை விசுவசியுங்கள்'' என்ற வார்த்தைகளோடு ஆரம்பித்த கிறிஸ்துவின் போதனைகளின் சாரமாகவமையும் மனம்திரும்பல், விண்ணரசு ஆகிய வைபற்றிய கருத்தும், மறையுண்மையும் நற்செய்தி முழுவதிலுமே தெளிக்கப்பட்டிருக்கின்றன. எனவேதான் . புதிய ஏற்பாட்டிலேகூட பாவம் என்ற பதமும் அதன் உட்கருத்தும் கிறிஸ்துவின் போதனை யின் மையமாகிய விண்ணரசினதும் முழுமையான மனந்திரும்புதலி னதும் ஒளியினிலே விளக்கப்படவேண்டும். அப்போதுதான் பாவத்தின் சுமைகள் எவ்வாறு எம்மை விண்ணரசினுள் நுழையாவண்ணம் அழுத்தி விடுகின்றன என்பதையும், உண்மையான மனம் திரும்புதலை அவை எவ்வாறு தடுக்கின்றன என்பதையும் நாம் இனம் காட்டமுடியும்.

புதிய ஏற்பாட்டிலே ''பாவம்'' மூநிலைப்பட்டதாக விளக்கப்படு கின்றது. அதாவது செயல், நிலை, வலு என்ற மூவிதமான கருத்துக் களுடன் பாவம் விளக்கப்படுகின்றது. பாவத்தின் விளைவாக மரண மும், நித்திய அழிவும் அங்கு கூறப்படுகின்றன.

இன்றைய உலகிலே பாவம் எவ்வாறு படர்ந்திருக்கின்றது. இன் றைய உலகின் சமுதாய அமைப்புகளில் பாவம் பன்முக நிலைகளிலே எவ்வாறு ஊடுருவி வளர்கிறது என்பதை தீர்க்கமாக ஆராயவேண்டும். இதற்கு இன்றைய உலகைப் பற்றிய சரியான நோக்கினை நாம் கொண் டிருப்பது அவசியமானதாகும். முதலாவதாக 17-ம் நூற்றுண்டின் பிற் பட்ட காலத்தில் இருந்து இன்றுவரையிலான சமுதாயத்திலே ஆழ மான, ஆக்கபூர்வமான வேகமான பல மாற்றங்கள் ஏற்படுவதை வர லாறு எமக்குக் காட்டுகிறது. இதுவரை பாரம்பரியத்திலே ''அப்படி செய்தார்கள்'' ''இது மரபு வழிவந்த பழக்கம்'' என்று சொல்லி சமுதாயத்தின் வளர்ச்சியையும், வாழ்க்கையையும் எடைபோட்டு அளவைசெய்து கொண்டு வந்தகாலம் மாறி இப்பொழுது அறிவியலை யும் அனுபவத்தையுமே அடிப்படையாக வைத்து விஞ்ஞான உலகிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபவ ரீதியான ஒரு வளர்ச்சியை அளவுகோலாக்கி வாழுகின்ற ஒரு சமுதாயத்திலே காலடி எடுத்து வைத்துக்கொண்டிருக்கிறோம். ஆகையினாலேதான் பாரம்பரியமாக, மரபுநெறியாக கொள்ளப்பட்ட எத்தனையோ மதிப்பீடுகளும், விழுமியங்களும் (values) இன்று தளர்ந்திருக்கின்ற ஒரு நிலையை நாம் வாழ்வியலின் பல அங்கங்களிலே தெளிவாக தரிசிக்கின்றோம். இதற்கு அடிப்படைக் காரணம் சமகாலத்தில் சமுதாயத்திலே, மாவிடவர்க்கத்திலே ஏற்பட்ட ஒரு புதிய பரிணாமவளர்ச்சி என்பதை நாம் மனதில்கொள்ள வேண்டும்; இரண்டாவதாக கடந்த சில ஆண்டுகளிலே சமூகவியல், பொருளியல் அரசியல் போன்ற சமுதாயத்தை யொட்டிய அறிவியல் கிளைகளும், துறைகளும் மிகவும் துரிதமாக வளர்கின்ற ஒருநிலையை நாம் காண்கின்றோம். இவை அனைத்துமே மனிதனுடைய உளவியல் பற்றிய புதிய சிந்தனைகளையும் மனிதனின் ஆளுமைபற்றிய புதிய கருத்துக்களையும் கொண்டு வந்திருப்பதனாலே மனிதனின் ஆளுமைபற்றிய பல விரிவான கருத்துக்கள் இன்று நிலவுவதை பார்க்கின்றோம். எனவேதான் மனிதனே ஒரு ஆழமான மறைஉண்மை (myteiy) என்ற கருத்து இன்று முன்னிலைக்கு வந்திருக்கின்றது. மனிதனை முழுமையாக அவன் உள்ளத்திலே, உள்ளியல்பிலே அறிவது ஒரு மறைஉண்மை போன்றது என்பதை நாம் இன்னுமின்னும் விஞ்ஞான ரீதியாக ஏற்றுக்கொள்கின்ற ஒரு காலத்தில் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். ஆகையினாலே மனிதனின் ஆளுமை பற்றிய புதிய அறிவியல் சிந்தனையின் நிழலிலே நாம் பாவம் என்ற இந்த பதத்தையும் நிறுத்தி தொடர்புபடுத்தி ஆராய வேண்டும். மூன்றாவதாக கடந்த சில தசாப்தங்களுக்கு முன்னதாகத்தான் ஆசியாவிலே கூட பல நாடுகள் ஐரோப்பிய அடிமைத்தனத்திலே இருந்து விடுவிக்கப்பட்டன. ஆகையினாலே தேசியம் சுயநாட்டு உணர்வு மண்வாசனை மிக்க கலாச்சார வளர்ச்சி போன்ற பதங்களும் அவை உணர்த்துகின்ற கருத்துக்களும் பரவலாக எம்மவர் மத்தியிலே காணப்படுகின்றது. இன்று தனிமனித விடுதலை, சுயநிர்ணய போக்கு போன்ற கருத்துக்கள் வலுப்பெற்று வளர்ச்சியடைந்து வருவது சமுதாயத்திலே கண்கூடு. மனிதன் உண்மையான விடுதலை என்ன என்பதையும், முழுமையான விடுதலை தன்னைத்தானே நிர்ணயித்து செயலாற்றுகின்ற தன்மை என்பதையும், அறிவு பூர்வமாகவும், உணர்வு பூர்வமாகவும் அறிந்து வருகின்ற ஒரு நிலையை நாம் அவதானிக்கிறோம்.

அடுத்ததாகப் பலதரப்பட்ட நிலைகளிலே பொருளாதாரப் போட்டிகள் நாடுகளுக்கு மத்தியிலே, ஒரு நாட்டின்—இனங்களுக்கு வர்க்கங்களுக்கு இடையிலே ஏற்படுவதையும் இவ்விதமான போட்டிகளால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணுக்கணக்கற்ற மக்கள் பாதிக்கப்படுவதையும் நாம் காண்கின்றோம். இலங்கையில் மட்டும் ஆயிரக்கணக்கான பள்ளிச்சிறுவர்கள் நாள்தோறும் வேலைக்கு அமர்த்தப்படுகிறார்கள் என்பதை சமீபத்தில் பத்திரிகை செய்திகளில் படித்தோம். இதுபோன்ற எத்தனையோ சமூக சமுதாய பிரச்சினைகள், சீர்கேடுகள் கோரவடிவங்களில் எம்மக்களை வேதனைக்கு இட்டுச்செல்கின்றன. தனிநபர்களுக்கு இடையிலும் பொருள் படைத்தவர்களுக் கிடையிலும், பல் தேசிய நிறுவனங்களுக் கிடையிலும் ஏற்படுகின்ற பொருளாதார போட்டிகளும் மோதல்களும் உலகளாவிய அளவில் மோசடிகளையும், சுரண்டல்களையும் சீரமைப்பான சூழ்நிலையில், நேர்மையின் நீதியின் போர்வையில், ஏமாற்றி வருவதை நாம் தெளிவாக காண்கிறோம்.

சமூக தொடர்பு சாதனங்களும் போக்குவரத்து வளர்ச்சியும் இந்த நூற்றுண்டின் நடுப்பகுதியிலே இருந்து மிகவும் துரிதமாக வளரும் நிலையினை உணர்கிறோம். இதனால் உலகமே ஒரு கிராமம்போன்று குறுகிவிட்டது என்று கூறும் அதேவேளையிலே வெவ்வேறு காரணிகளால் நாம் பிரிந்துவாழும் நிலையும் ஏற்பட்டிருக்கின்றது என்பதை மறுக்கமுடியாது. சமூகத் தொடர்புக் கருவிகளும், போக்குவரத்து சாதனங்களின் வளர்ச்சியின் சிறப்பும் சீரிய சமுதாய வளர்ச்சிக்கு உந்து சக்தியாக அமைந்தபோதிலும் பலதரப்பட்ட, தன்னல உணர்வுகளால் மனிதன் இவை இருந்தும்கூட பிரிந்து விலகி தனிமை உணர்விலே தவிக்கின்ற பரிதாப நிலையும் இன்றுவரை உண்டு. அடுத்து பல்வேறு நாடுகளுக்கு மக்கள் உல்லாசப் பயணிகளாக அல்லது வேலைதேடி புறப்பட்டு குடிபெயர்வதனால் கலாச்சார பரிமாற்றங்கள் ஏற்படுகின்றன. இதுகூட சிலவேளைகளில் வாழ்வியலின் அடிப்படையில் சிலமாற்றங்களை ஏற்படுத்துகின்றன. வளரவேண்டும், உயரவேண்டும் என்ற துடிப்பு இன்று எம்மக்களை ஏதோ வகையிலும் அளவிலும் உந்துவதினாலே பொருளாதார வளர்ச்சியை முன்வைத்து சமுதாயவளர்ச்சி ஏற்படும் நிலையினை இன்று நாம் காண்கிறோம். குடும்பவளர்ச்சி சமுதாய வளர்ச்சி என்று பார்க்கும்போது எல்லாமே பணம் என்ற அடிப்படையில் செயலாற்றுவதனை அவதானிக்கலாம். வளர்ந்த நாடுகளும் வளர்கின்ற நாடுகளும் தமது வளர்ச்சியை பொருளாதார அடிப்படையில் அளவிடுவதனை தெளிவாக காண்கிறோம்.

சமத்துவம், சகோதரத்துவம் என்ற குரல்கள் நாடுகளின், உலகின் பல பாகங்களிலும் எதிர் ஒலிக்கின்ற போதிலும் வர்க்க, இன, மதப்பிரிவினைகள் தொடர்ந்து சமுதாயத்தை கீழே தள்ளிவருகின்றன. பின்நோக்கிப் பார்க்கின்றபோது சாதிப்பிரிவினைகள், வர்க்கப்பிளவுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுமையானவை என்று பழந்தமிழ் இலக்கியங்களிலும், வாழ்வியல் நெறிகளிலும் காட்டப்படுகின்ற போதிலும் அவை உள்ளுணர்வு பூர்வமாக ஏற்கப்பட்டு சமுதாய மாற்றத்தை ஆதரித்தவையா என்று கேட்டால் இல்லையென்றபதிலையே நாம் ஏக்கத்துடன் பெறுகின்றோம். வாய்ச் சொல்லினால் மட்டும் சமுதாயத்தை மாற்றமுடியாது. செயல் நிலையிலேயே மாற்றங்கள் விளைவிக்கப்பட வேண்டும் என்பதை இது எமக்கு சுட்டிக்காட்டுகிறது. இன்றுகூட வளர்ந்த நாடுகளிலும் நிறம், இனம், குலம், சாதி, மொழி என்ற வகைகளில் பிரிவினைகள் வளர்க்கப் படுவதையும் ஒற்றுமை சமாதானம், சமத்துவம் போன்றவை மேடைகளிலே மட்டும் முழங்கப்படும் உறுதிப்பாடற்ற தத்துவ சுரங்களாக காற்றிலே மட்டும் தூவப்படுவதையும் நாம் காண்கிறோம்.

இதுவரை யாம் விவரித்த ''இன்றைய உலகில்'' பாவம் எவ்வாறு இனங்காட்டப் படவேண்டும் என்பதை இனி ஆராய்வோம். வர்க்கப் பிரிவினைகளை வகுப்புவாத பேதங்களை வாய்ச் சொல்லினால் மட்டும் மாற்றிவிடலாம் என்று போலிவாதம் செய்பவர்கள் சமுதாயத்தை ஏமாற்றும் பாவத்திற்கு உள்ளாகின்றார்கள். சமுதாயத்தின், இனங்களின் வேதனைகளையும், விரக்தியையும், வீழ்ச்சியையும் சாதகமாக்கி, அதை மாற்றவிடாது தடுத்து அப்படியே நிலைபெறச் செய்வதன் மூலம், தான் உயர எத்தனிப்பவன் ஆதாமின் வரிசையிலே அங்கத்துவம் பெறுகிறான். நேர்மை தவறி, நீதி தவறிப் பொருள் சேர்த்து ஊழல், சுரண்டல், மோசடி, கலப்படம், கறுப்புப்பணம் என்று காலமெல்லாம் கணக்குப்போட்டுக் காசுசேர்ப்பவன், இல்லாரையும் கல்லாரையும் இழிவுபடுத்தி; ஒதுக்கி, ஒடுக்கி அவர்களின் பலவீனத்தைத் தன் பலமாக கொள்பவன் பாவத்தைத் தன் வாழ்நெறி யாக்குகிறான்.

இத்தகைய நிலையிலேதான் பாவம் உலக வங்கிமுதல் உணவுக் கடை ஈறுகப் படர்ந்து பரவி சுரண்டலையும் மோசடிகளையும் இனங்காண முடியாதவண்ணம் உலகில் நிலைபெறச் செய்கிறது. இவற்றிற்கு எல்லாம் அடிப்படையாக சுயநலப்போக்கும் தன்னல நாட்டங்களுமே காரணிகளாகின்றன.

திருச்சபைகூட இதுவரை பாவத்திற்கு வரைவிலக்கணம் கொடுத்து, 10 கட்டளைகள் என்ற அளவையில் தனிமனித செயல்களை அளந்து பாவம், பாவமில்லை என்ற குறுகிய நோக்குடனேயே செயல்பட்டது. இன்று அந்நிலை மாறி சிந்தனையாலும் சொல்லாலும் செயலாலும், இன்னும் கடமையில் தவறுதலாலும் கூடப் பாவத்தை ஒருவன் புரியலாம் என்று அறுதியாகக் கூறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாவம்பற்றிய திருச்சபையின் கருத்து

செயல் புரிய வேண்டிய வேளையில் செயலற்று இருப்பதும், செயலாற்ருது விடுவதும் பாவம் ஆகும் என்றும் இப்புதிய உணர்வு நற்செய்தியின் அடிப்படை மதிப்பீடுகளை ஒட்டியே விளக்கப் படுகின்றது (மத். 25 : 31-38)

உண்மையான கிறிஸ்தவ மனநிலையில் விரித்துப் பார்க்கும்போது எந்தவொரு பாவமுமே தனிமனிதனை மட்டும் பாதிக்கும் செயலாக முடியாது. அது ஒரே நேரத்தில் தனி மனிதனையும், இம்மனிதன் சார்ந்திருக்கும் கிறிஸ்தவ சமூகத்தையும், அதாவது கிறிஸ்துவின் மறை யுடல் முழுவதையுமே பாதித்து; குறைநிலைக்கு இட்டுச் செல்கின்றது. பாவம் படைப்புக்கும் படைத்தவருக்கும் இடையிலான பரஸ்பர உறவு களை மட்டும் பாதிப்பதோடு நின்றுவிடுவதல்ல, மாருக ஆளுமைப் பட்ட அன்புறவுகளே பாவத்தால் அழிக்கப்படுகின்றன.

நற்செய்தியிலேகூட இறைவனை அன்புசெய்யுங்கள் என்றும், ஒரு வர் ஒருவரை அன்பு செய்யுங்கள் என்றும் குறிப்பிடப்படும் வேளையில் பின்னையது முன்னையதை நடைமுறைப் படுத்துகின்றது என்ற கருத்தே விதந்துரைக்கப் படுகின்றது. எனவேதான் அருளப்பர் தமது திருமட லில் கூறுகின்ருர் தனது அயலவனை அன்பு செய்யாது இறைவனை அன்பு செய்கிறேன் என்று கூறுபவன் பொய் பேசுகிருன் என்று.

எனவே "பாவம்" பரந்த விரிவான, தெளிவான சமுதாய கண் ணேட்டத்தில் விளக்கப்படவேண்டும். ஒரு சில கட்டளைகள், கற்பனை கள், சட்டங்கள், நெறிகள் என்ற குறுகிய சிறைக்குள் பாவத்தை நிறுத்தி ஆராய, அல்லேல் விளக்க முனைவது பாவம்பற்றிய கிறிஸ் தவக் கருத்து நிலைக்கு ஏற்புடமையற்றதாகும்.

மனித சமுதாய உறவுகளின் பின்னணியில் மனித—உலக உறவு களின் ஒளியில் இறைவன்—மனிதன்: சமுதாயம்—இறைவன் என்ற உற வுப் பாலங்களின் தளத்தில் பாவம் பற்றிய கருத்தும் இயல்பும் புது விளக்கத்தை, உருவத்தைப் பெறவேண்டும். பாவம் தனிமனித செயல் என்பதிலும் பார்க்க அது ஓர் சமுதாயத்தைப் பாதிக்கும் பயங்கர நோய் என்ற விழிப்புணர்வு வளரவேண்டும்.

இதனை ஓர் உதாரணங்காட்டி விளக்குவோம். இலங்கையில் தேயிலை உற்பத்தியையும் சந்தைப்படுத்தலையும் நெறிப்படுத்தும் இரு பது ஐரோப்பிய குடும்பங்கள், இச் சந்தைப்படுத்தல் மூலம் பெறும் பெருமளவு ஆதாயத்தைக் கொண்டு ஐம்பகமான வாழ்க்கையை நடத் துகின்றனர். ஆனல் கடந்த ஒரு நூற்ருண்டு காலமாக தேயிலைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோட்ட தொழிலாளரின் வாழ்வு அடிப்படை எதுவித மாற்றத்தையுமே அடையவில்லை. இந்தமோசடி ஒரு சமுதாயத்திற்கு எதிரான பழி என்பதை எவரும் ஏற்றுக்கொள்வர்.

உலகசந்தை வழியாக சுரண்டலையும் மோசடிகளையும் இனிமையாக நடாத்தி தமது மனச்சாட்சிக்கு நியாயம் கற்பிக்கும் நாடுகளில் பெரும்பாலானவை கிறிஸ்தவ நாடுகள் என்பதனையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். இங்குதான் பாவத்தின் சமூகச் சார்பு கேள்விக் குறியாகின்றது.

பாவிகளையும் அருளாளர்களையும் ஒருங்கே கொண்ட அமைப்பு என்ற அளவில் திருச்சபையில் பாவமும், அருளும், குறையும் நிறையும் ஒரே நேரத்தில் இருக்கின்றபோதிலும் இங்கு குறைகள் வளர விடாமல் களையப்படும் போதுதான் திருச்சபை பாவத்தை எதிர்க்கும், பாவத்திற்கு எதிராகப் போராடும் அருட்சாதனமாக தோற்றமளிக்கும்.

மறையுரைகளினாலும் வாய் மொழியினாலும் மட்டும் மாற்றத்தை உருவாக்க முனையாமல் வாழ்வில் சாட்சியம் பகருவதன் மூலம் சமுதாயத்தில் திருச்சபை அருள்வாழ்வை நெறிப்படுத்த வேண்டும்.

நிற இன ரீதியிலான பிரிவினைகளும், வர்க்க முரண்பாடுகளும் வகுப்புவாத சாதிக்கொடுமைகளும் திருச்சபையினுள் வளருமாயின் திருச்சபை சமூக அளவில் தனக்குத்தான் எதிர்சாட்சியாக, எதிர் அடையாளமாக ஆகின்றது. எந்த அளவையைக் கொண்டு திருச்சபை உலகை அளவிடு செய்கின்றதோ, தீர்ப்பிடுகின்றதோ அதே அளவையில், அதே அளவு கோலினால் திருச்சபை முதலில் தன்னைத்தானே அளந்துகொள்ள வேண்டும். அப்போதுதான் திருச்சபை உலகில் உண்மையான சான்று பகர முடியும்.

பாவத்தைப் பொறுத்த அளவில் மட்டுமல்ல திருச்சபையின் அமைப்பு முறையில் நிலவும் ஏனைய பிளவுகளையும் சீரமைக்க இடை. விடாது முயலவேண்டும்.

எமது பங்குகளில் எழும் பிரச்சினைகளும் பிரிவினைகளும், பழிவாங்கும் மனப்பான்மைகளும், பகிர்ந்து வாழ மறுத்தலும், போட்டி பொறாமைகளும் கிறிஸ்தவ கண்ணோட்டத்தில் தீர்க்கப்பட வேண்டும். சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் வெற்றுச் சுலோகங்கள் ஆக்கிவிடாமல் வாழ்வியல் நிலையில், அவற்றிற்கு உயிரூட்டம் தர வேண்டும். அப்போதுதான் திருச்சபை பாவத்தை வெறுத்து விலக்கி வருகின்றது என்பது மட்டுமல்ல நல்லதை, நன்மையை போற்றுதற்குரிய செயல்களை ஆற்றிட ஆவல்கொண்டுள்ளது என்ற நிறைவான கருத்து மேலோங்கிவரும்.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவன் எம்மை மன்னிக்கும் இரக்கத்தின் தந்தை :

(பேருள்திரு தோமஸ் சவுந்தரநாயகம்)

இறைவன் இரக்கமுள்ளவர் என்பதைக் கிறிஸ்து தமது இவ்வுலக வாழ்வில் நமக்கு வாழ்ந்து காட்டியுள்ளார். இந்த இரக்கம் நிறைந்த இறைவனை, கிறிஸ்து வெளிப்படுத்திய இறை இரக்கத்தை உணரவேண்டுமாயின் நாம் பழைய ஏற்பாட்டைப் புரட்டிப் பார்க்கவேண்டும். இப் பழைய ஏற்பாட்டில் இறைவன் தமது இரக்கத்தை எவ்வாறு வெளிப் படுத்தினர் என்பதை ஒருசில உதாரணங்களுடன் பார்ப்போம். இந்த இறை இரக்கத்தைப்பற்றிக் கூறும் இடத்தில் 2-ம் அருள் சின்னப்பர் " கடவுள் இரக்கமுள்ளவர் அன்பு மிக்கவர் " என்று புனித சின்னப்பர் எபேசு மக்களுக்குக் கூறுவதை மேற்கோள்காட்டி இறைவனின் இரக்கம் அளவிடமுடியாதது, எல்லையற்றது என்பதை வலியுறுத்தியுள்ளார்.

## கடவுள் இரக்கப்பெருக்குள்ளவர் :

இறைவன் இரக்கமுள்ளவர், அன்புள்ளம் கொண்டவர் என்பதை நாம் முழுமையாகப் புரிந்துகொள்ள பழைய ஏற்பாட்டில் இறைவன் இஸ்ரவேல் மக்களின் வாழ்க்கையில் எவ்வாறு செயலாற்றினர் என்பதைத் தெரிந்துகொள்வது அவசியம்.

இன்று மக்களிடையேயுள்ள பொதுமையான எண்ணம், இறைவன் தண்டிப்பவர், கண்டிப்பவர், பயங்கர விளைவுகளை ஏற்படுத்துபவர் ஏன், பழிவாங்குபவர் என்பதாகும்.

ஆனல் பழைய ஏற்பாட்டை நாம் ஆழமாகப் படிக்கின்ற வேளையில் இறைவனின் உண்மைக் குணஇயல்புகள் மேற்கூறியவை அல்ல என்ற முடிவுக்கு நாம் வரலாம்.

மாறுக இறைவன் இரக்கமும் அன்பும் கொண்டவர் என்பது உறுதிப்படுத்தப் படுகின்றது. பழைய ஏற்பாட்டில் இறைவன் மக்களுக்குக் காட்டிய அன்பு, இரக்கம் என்பவற்றின் ஆழ்ந்த பொருளை விளங்கிக் கொள்வதற்கு அம்மக்கள் இறைவனை எந்த உருவகத்தில் கண்டார்கள் என்பதை அறிவது முக்கியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பண்பாட்டில் இறைவன் :

கீழைத்தேய மக்கள் குறிப்பாக இந்தியக் கலாச்சாரத்தில் வாழ்கின்றவர்கள் இறைவனை 'அன்னை'யாகக் கண்டார்கள். அவர்கள் தங்கள் மொழிக்கு முதலாகத் 'தாய்'மொழி என்றும், நாட்டிற்கு 'தாய்' நாடு என்று அழைப்பதும், நதிகளுக்குப் பெண்ணின் பெயர் இடுவதும் அவர்கள் பண்பாட்டில் 'பெண்மை' முதலிடம் வகிப்பதென்பதை ஓரளவிற்குக் காட்டுகின்றது.

ஆனால் மேலைத்தேயச் சமயபண்பாட்டுச் சிந்தனைச் சூழலை நோக்குமிடத்து, இறைவனைத் 'தந்தை' என்று அழைப்பது குறிப்பிடத்தக்கது. மேயக்கர் [ ] இறைவனைச் 'சின்' (Chin) என்றும், கிரேக்கர்கள் தேயுஸ் (Deus) என்றும், உரோமர்கள் யூபிரற்றஸ் என்றும் அழைத்தது அவர்களின் பண்பாட்டுச் சூழலில் 'தந்தைமை' முதலிடம் பெறுகின்றது என்பதை வெளிப்படுத்துகின்றது.

## இஸ்ராயேல் கண்ட இறைவன் :

இஸ்ரவேல் மக்களும் இறைவனைத் தந்தை என்று அழைத்தார்கள். இறைவனைத் தந்தையாகக்கண்ட இஸ்ரவேல் மக்கள், தாங்கள் இறைவனால் படைக்கப்பட்டவர்கள் என்ற பொருளைக் கொண்டார்கள். மாறாக இறைவன் முதற்பொருள் அவனிடம் இருந்து புறப்பட்டவர்கள் என்பதை ஏற்றுக்கொள்ளவில்லை.

இஸ்ரவேல் மக்கள் இறைவனைத் தந்தை என்று அழைப்பதற்கு அவர்கள் பண்பாடு, சமயச்சூழல் இவற்றைமட்டும் காரணமாகக் காட்டிவிட முடியாது. மாறாக இஸ்ரவேல் மக்களுக்கு இறைவன் தன்னைத் தந்தையாக வெளிப்படுத்தியதுதான் அவர்கள் இறைவனைத் தந்தை என்றழைப்பதற்கு முதற்காரணமாக அமைகின்றது.

## இரக்கத்தை வெளிப்படுத்தும் பதங்கள் :

விவிலியநூல் இறைவனைத் தந்தைஎன்று பல இடங்களில் அழைக்கின்றது. இன்னும் இறைவனின் அன்பு இரக்கம் என்பவற்றைப் புரிந்துகொள்ள ? எசேட் (Hesed) என்ற எபிரேயச் சொல்லின் பொருளையும், 'இரகமீன்' என்ற சொல்லின் பொருளையும் புரிந்துகொள்ளுவது அவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரக்கம்பற்றி விளக்குகின்ற வேளையில் 'எசேட்' என்னும் சொல் 'நன்னயம்' என்னும் பண்பின் உள்ளார்ந்த நிலையை எடுத்துக் காட்டுகின்றது. அந்த 'நன்னயம்' இருவருக்கிடையில ஏற்படுகின்றபோது அவர்கள் ஒருவருக்கொருவர் பற்றுறுதி உள்ளவர்களாக மாறுகின்றனர். உள்ளார்ந்த கடமை காரணமாகவே இவர்கள் இவ்வாறு மாறுகின்றார்கள். இங்கு குறிப்பிடப்படும் கடமை ஒழுக்க ரீதியானது மட்டுமன்று, பெரும்பாலும் சட்டரீதியாகவும் உள்ளது எனும் உண்மை மேற்கூறிய கருத்தை மாற்றிவிடாது. பழைய ஏற்பாட்டில் ஆண்டவரோடு தொடர்புடைய சொல்லாக 'எசெட்' பயன்படுத்தப் படும்போது இஸ்ராயேலரோடு இறைவன் செய்திருந்த உடன்படிக்கையின் பின்னணியில்தான் அது எப்போதும் பயன்படுத்தப் படுகின்றது. இறைவன் தான் செய்து கொண்ட உடன்படிக்கைக்கு ஏற்றவாறு அதை மதித்து நடக்கும் பொருட்டு இறைவன் ஒரு கடமையையும் தம்மேல் ஏற்றுக்கொண்டார். இதனால் 'எசெட்' சட்டரீதியான ஒரு பொருளையும் பெறுகின்றது. இஸ்ராயேலர் உடன்படிக்கையைமீறி, அதன் நிபந்தனைகளை மதிக்கத் தவறியபோதெல்லாம் இச்சட்டரீதியான கடமை கலாவதியாகிவிட்டது.

ஆனால் இப்படிப்பட்ட கட்டங்களில்தான் 'எசெட்' சட்டரீதியான கடமையிலிருந்த பிரிந்து தனது ஆழ்ந்த பொருளை விளக்கலாயிற்று. அது தொடக்கத்தில் வழங்கிய பொருளில் கொடுக்கின்ற அன்பை — பிரமாணிக்கமின்மையை விடவும், ஆற்றல் படைத்த அன்பை — பாவத்தை விடவும் சக்திவாய்ந்த அருளை உணர்த்தலாயிற்று

யாத்திராகமத்தில் மோயீசன் ஆண்டவரைப்பார்த்துக் கூறும் வார்த்தைகள் இறைவனின் இரக்கத்தையும் அன்பையும் காட்டி நிற்கின்றது. "எல்லா அதிகாரமும் கொண்டுள்ள ஆண்டவராகிய கடவுளே, அருள்நோக்கும் தயவும் பொறுமையும் இரக்கமும் பொருந்திய கடவுளே" (யாத். 34 : 6) மீண்டும் 2 சாமுவேல் ஆகமத்தில் தாவீது ஆண்டவர் இரக்கமுள்ளவர் என்பதைக் 'காலாத்' நாட்டு மக்களுக்கு தூதுமூலம் செய்தி அனுப்பியதும் ஆண்டவர் இரக்கம் நிறைந்தவர் என்று காட்டுகின்றது. "இப்பொழுதே ஆண்டவர் உங்களுக்கு இரக்கத்தையும் உண்மையையும் வெகுமதியாகத் தந்தருள்வார்."

ஆண்டவன் இரக்கத்தை வரையறுக்கப் பழைய ஏற்பாடு பயன்படுத்தும் மற்றொரு சொல் 'இரகமீன்.' (Rahamin) இது தனது மூலப் பொருளிலே தாய்க்குரிய அன்பைக் காட்டி நிற்கின்றது. இதயத்தின் ஆழ்ந்த கோரிக்கையாக இவ்வன்பு துலங்குகின்றது. 'எசெட்' விளக்கும் பிரமாணிக்கம் என்னும் ஆண்மைப் பண்பிற்கு மாறான 'பெண்மை'ப் பண்பென இதை நாம் ஒருவகையில் கொள்ளலாம். தாய்மை என்னும் மறைபொருளின் ஆற்றலால் இவ்வன்பு பிரமாணிக்கமுடையதாகவும், மாய்க்கவியலாததாகவும் இலங்குகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசையாஸ் ஆகமத்தில் "பெற்ற தாய்க்கு அன்பு வற்றிப்போகுமோ? பால் குடிக்கும் குழந்தையை அவள் மறப்பதுண்டோ"? அப்படியே பெற்றவள் தன் பிள்ளையை மறந்துவிட்டாலும் நாம் உன்னை ஒருபோதும் மறவோம் (இசை. 49 : 13). தொடர்ந்து ஏசே ஆகமத்தில் கூறப்படுகின்றது "அவர்களுடைய பிரமாணிக்கமின்மையை நாம் குணமாக்குவோம். அவர்கள்மேல் உளமார அன்பு கூருவோம். ஏனெனில் அவர்கள் இருந்தசினம் ஆறிவிட்டது" (ஓசே. 14 : 5).

ஆண்டவர் நம்மட்டில் கொண்டுள்ள அன்பும் இரக்கமும் அவர் நம்மைப் பொறுமையோடு ஏற்றுக்கொண்டு நம் மனமாற்றத்திற்காகக் காத்திருக்கின்றார் என்பதை ஓசே ஆகமம் விளக்குகின்றது. 'எசேட்', 'ரகாமீன்' என்ற இரு வார்த்தைகளுக்கும் பழைய ஏற்பாட்டு அடிப்படையில் விளக்கம் காட்டப்பட்டது. வேதாகமத்தில் கையாளப்பட்ட இரு வார்த்தைக்கும் இறைவனின் அன்பையும் இரக்கத்தையும் பிரமாணிக்கத்தையும் இசையாஸ், ஓசே என்ற இரு தீர்க்கதரிசிகளின் விளக்கங்களோடு புரிந்துகொண்ட வேளையில், இந்த இறைவனின் அதே அன்பையும் இரக்கத்தையும் இன்னும் ஆழமாகப் புரிந்துகொள்ளக் கையாளப்பட்ட சில உருவகங்களை ஆராய்வோம்.

## பழைய ஏற்பாட்டில் உருவகங்கள் :

இறைத்தந்தையின் இரக்கப்பெருக்கத்தை இஸ்ராயேலரின் பிதாப்பிதாக்களும், இறைவாக்கினர்களும் வெளிப்படுத்தியுள்ளார்கள். இவர்கள் இறைவனின் நீதியையும் தண்டனையையும் எடுத்துரைத்தபோதும் இறைத்தந்தையின் இரக்கத்தைப் பறைசாற்ற மறக்கவில்லை.

இறைவனை மேய்ப்பனாகவும், இஸ்ராயேலரை மந்தையாகவும் உருவகித்துக்காட்டியது இறைத்தந்தை இஸ்ரவேலிடம்கொண்டுள்ள கரிசனையையும் அன்பையும் காட்டுகின்றது. (இசையாஸ் 40 : 11) "ஆயனைப் போல் அவர் தனது மந்தையை மேய்ப்பார். ஆட்டுக்குட்டிகளைத் தம் கையால் கூட்டிச் சேர்ப்பார். அவற்றை அன்போடு எடுத்து அரவணைப்பார்." மேலும், இஸ்ரவேலை மனைவியாகவும் இறைவனைக் கணவனாகவும் காட்டுகின்றார் ஒசே. (ஓசே. 2 : 16) "என் கணவன் என அவள் நம்மைச் சொல்லுவாள். என் பாகாலே எனச் சொல்லமாட்டாள்." மீண்டும் இசையாஸ் 54-ம் அதிகாரத்தில் 5-ம் வாக்கியத்தில் கூறுகின்றார், "ஏனெனில் உன்னைப் படைத்தவரே உனக்குக் கணவர்." இசையாஸ் மீண்டும் இறைவனின் அன்பைக் காட்டுவதற்கு இஸ்ர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலைத் திராட்சைத் தோட்டத்திற்கு ஒப்பிட்டு அதை நன்கு கண்காணிக்கும் தலைவனாக இறைவனை உருவகிக்கின்றார். இவ்வாறு உருவகங்களில் பேசிய இறைவாக்கினர் இறைவனின் இரக்கமும் அன்பும் என்ற பாணியில் பேசினார்கள்.

மேலும் இறைவனின் தாராள கொடைகளும் இறைவன் இரக்கமுள்ளவர் என்பதைப் புலப்படுத்துகின்றது. '' நாம் உன்னைப் பெருங் குடியாய்ப் பெருகச்செய்து உன்னையும் ஆசீர்வதித்து உன் பெயரையும் மேன்மைப்படுத்துவோம் '' (ஆதி. 12 : 2)

மேல் காணப்படுகின்ற வாக்கியங்கள் இறைவனின் அன்பையும், இரக்கத்தையும் எடுத்தியம்புகின்றன.

இறைவனின் இரக்கம் மனிதனுக்கு அருளப்படுவது அவர்களை மனந்திருப்புதற்கே. இதை எரேமியாஸ் ஆகமத்தில் நாம் காண்கின்றோம்.

'' எப்பிராயீம் நம் அருமை மகனல்லவோ
அவன் நம்முடைய அன்புக் குழந்தையல்லவோ
அவனை நினைத்து நம் உள்ளம் உருகுகின்றது
அவனுக்கு நாம் திண்ணமாய் இரக்கம் காட்டுவோம்.''

இறைவன் எமக்கு இரக்கம் காண்பிப்பது நம்மை மனம் திருப்பி மீண்டும் அவரின் பிள்ளையாகவே மாற்றவே. இஸ்ரவேல் மக்களை அன்புசெய்து வழிநடத்திய இறைவன் தனது ஒரே மகனை உலகிற்கு அனுப்பியதும் அவரிடம் சுரந்துவந்த அதே அன்பும் இரக்கமும்தான்.

தனது வெளிப்பாட்டிலும், வழிவடத்தலிலும் இரக்கம் காட்டிய இறைவன், மனிதர் அவர்கள் வாழ்க்கையிலே ஒருவர் ஒருவருக்கு இரக்கமும் அன்பும் காட்டவேண்டும் என்பது புத்தியுள்ள படைப்புகளாகிய நாங்கள் புரிந்துகொள்ள வேண்டியதொன்று. நான் உங்களுக்கு ஒரு புதிய கட்டளை தருகின்றேன். ஒருவர் ஒருவருக்கு அன்பு செய்யுங்கள்.

இப்படிப்பட்ட இறைவனின் மாறாத இரக்கத்தைப்பற்றி பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாட்டு நூல்கள் எடுத்தியம்புகின்றன. இறைவனின் நீதி, அவரது பிரமாணிக்கம் நிறைந்த அன்பின் இரக்கத்தில் நிறைவு பெறுகின்றது. இதுதான் எங்கள் அனைவரையும் பாவத்தன்மையில் இருந்து மீட்டு இறைவன்பக்கம் எடுத்துச் செல்லும் பரம அன்பாகும். இவ்விரக்கம் இல்லையேல் மனிதர்கள் மீட்பு அடையவே முடியாது.

தொகுப்பு : தொ. யேசுதாசன்
அ. யேசுதாஸ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயேசுக்கிறிஸ்து மனிதனை இறைவனோடும் மற்ற மனிதர்களோடும் ஒப்புரவாக்குபவர்

அருள்திரு டி. சாமிநாதன்

## 1. பாவத்தின் விளைவு பிரிவினை

மனிதன் இறைவனிடம் இருந்து பிரிந்துவிட்டான் என்பதை ஆதியாகமத்தில் நாம் அறிவோம். ஆதாம் ஏவாள் நிகழ்ச்சியை நோக்கும்போது மனிதன் தனது பாவத்தினால் தன்னைப் படைத்த இறைவனிடம் இருந்து பிரிந்துவிட்டதையும் அதன் பின்பு இந்தப் பிரிவினையால் ஏற்பட்ட இன்னொரு நிகழ்ச்சியாக எவ்வாறு மனிதன் பாவத்தின் விளைவாக மற்ற மனிதனிடம் இருந்து பிரிந்துவிட்டான். அண்ணன் தம்பியைக் கொலை செய்யுமளவுக்கு மனித சமுதாயம் பிளவுபட்டுவிட்டது என்பதையும் நாம் அறிவோம். இப்படிப்பட்ட மனிதனது வாழ்க்கையை நோக்கும்போது அவன் தானே ஒரு பிளவுபட்ட மனிதனாக மாறிவிட்டான். அவன் செய்ய விரும்புவது ஒன்று, ஆனால் அவன் வாழ்விலே செய்வது இன்னொன்று. இது நாம் அனைவரும் எம்மிலேயே பிளவுபட்டவர்களாக இருப்பதைத்தான் காட்டுகிறது. இந்தச் சூழ்நிலையில் வாழுகின்ற மனிதனுக்குக் கடவுள் என்னசெய்தார் என்று சொல்லிப் பலமுறை பழைய ஏற்பாட்டில் அறிந்துள்ளோம். இறைவனோடு பிளவுபட்ட மனிதனுக்கு, மனிதனோடு பிளவுபட்ட மனிதனுக்கு, தனக்குள்ளே பிளவுபட்ட மனிதனுக்கு, கடவுள் தனிப்பெரும் தந்தையாக, அன்புத்தந்தையாக இருந்து வருகிறார் என நாம் அறிவோம். அதுமட்டுமல்ல கடவுள் தந்தையாக என்ன செய்தார் எவ்வாறு தன்னுடைய மக்களை, பிரிந்துபோன மக்களை மீண்டும் அழைத்ததின் பயனாக அவன் மனம்திரும்பவேண்டும் என்ற செய்தியைப் பழைய உடன்படிக்கையில் நாம் அறிவோம். இவ்வாறு இறைத் தந்தையாகக் காலமெல்லாம் மனிதனை அழைத்துக்கொண்டிருந்தார். இந்த அழைப்பின் இறுதிக்கட்டமாக அளிக்கப்பட்டவர்தான் இயேசுக்கிறிஸ்து. இதைத்தான் புனித சின்னப்பர் எபிரேயருக்கு எழுதிய திருமுகத்தின் ஆரம்பத்திலே கூறுகிறார், பல்வேறு காலங்களிலும், பல்வேறு வேளைகளிலும் நம் முன்னோரோடு பேசிய இறைவன் இன்று தம் ஒரேபேறான மகன் மூலமாக நம்மோடு பேசுகிறார். எனவே நம் தந்தையாகிய கடவுள் இந்த மனிதனை அழைத்துக்கொண்டு, அவனை மனந்திருப்புமாறு அழைத்துக்கொண்டு, உறவாடும்படி அழைத்துக்கொண்டு வருவது ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்கட்டமாக இருப்பதை நாம் அறிவோம். ஆகவே இவருடைய வலிமை, இயேசுவினுடைய வலிமை இந்தப் பிரிவினையை ஆட்டியிருக்கும் இந்தப் பிளவிலே விழுந்துகிடக்கும் இந்த உறவுகளை முறித்துவிட்டு, முறிந்த உறவுகளைக் கொண்டுவிடுகின்ற சுதந்திர சக்தியுள்ள மனிதனை மறுபடியும், இயேசுவின்மூலமாகத் தந்தையாகிய இறைவனிடம் அழைத்துச் செல்லவும் அவருடைய அன்புப்பார்வையில் மற்ற மனிதனோடு துண்டிக்கப்பட்ட உறவுகளைச் சீர்ப்படுத்தவும், இதனால் அவன் முழுமை அடைந்து தன்னிலே முழுமனிதனாக மாறவும் இயேசுவில் ஒவ்வொரு மனிதனும் அழைக்கப்பட்டிருக்கிறான். இதைத்தான் ஆழமாக நோக்க வேண்டும். எனவேதான் இயேசு பிளவுபட்டுப் பிரிந்துபோயிருக்கிற மனிதனை மறுபடியும் இணைப்பவராக இருக்கின்றார். ஆண்டவர் யேசுவினுடைய வலிமையும் அன்புச்செயலும் அவருடைய போதனையும் பிரிந்துபோன இந்த மனிதனை தந்தையோடு சேர்ப்பதற்கும், மற்ற மனிதனோடு பிணைப்பதற்கும், அவனை முழுமனிதனாக மாற்றுவதற்கும் உள்ள செய்தியைப் புதிய ஏற்பாட்டில் எல்லா இடங்களிலும் நாம் காணலாம். ஒத்தமை நற்செய்தி, புனித அருளப்பரின் நற்செய்தி, புனித சின்னப்பரின் திருமடல்கள் எல்லாவற்றிலும் இதைப் பரவலாகக் காணமுடியும்.

## 2. இயேசுவில், மனிதன் இறைவனோடு ஒப்புரவாகவேண்டும்

கொரிந்தியருக்கு எழுதிய இரண்டாம் திருமுகம் 5-ம் அதிகாரத்தில் இனிமேல் நாங்கள் ஊனக் கண்கொண்டு யாரையும் பார்ப்பதில்லை. இதற்குமுன் ஊனக் கண்கொண்டு கிறிஸ்துவைப் பார்த்திருந்தாலும் இனிமேல் அப்படிப் பார்ப்பதில்லை என சின்னப்பர் கூறுகின்றார் ஆகவே மனிதன் கிறிஸ்துவுக்குள் வாழ்ந்தால் புதுப் படைப்பாகிவிடுகின்றான். பழையன கழிந்துபோகின்றன. இதோ புதியன திரும்பியுள்ளன, இவை எல்லாம் கடவுளினுடைய செயல்தான் அவரே கிறிஸ்துவின் வழியால் நம்மை நம்மோடு ஒப்புரவாக்கி, ஒப்புரவுசெய்யும் பணியை எங்களுக்குக் கொடுத்தார். உள்ளபடியே கடவுள் உலகினரின் குற்றங்களுக்கு உரிய கடன் கணிக்காமல் அவர்கள் கிறிஸ்துவுக்குள் நம்மோடு ஒப்புரவாக்கி அவரே அந்த ஒப்புரவுச் செய்தியை எங்களிடம் ஒப்படைத்தார். ஆகவே நாங்கள் கிறிஸ்துவின் தூதுவராகச் செயலாற்றுகின்றோம். நாங்கள் போவது கடவுளை அறிவுறுத்துவது போலாகும்.

ஆகவே கிறிஸ்துவின் பெயரால் நாங்கள் மன்றாடுகின்றோம். கடவுளோடு ஒப்புரவாகும்படி இந்தப் பகுதியை ஆழமாக நாம் பார்க்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது புனித சின்னப்பர் ஒப்புரவு என்னும் வார்த்தையைப் பயன் படுத்திச் சில புதிய கருத்துக்களை நமக்கு அளிக்கின்றார். இந்த ஒப்புரவு என்னும் சொல்லின் கிரேக்க ஆதார மொழியைக் கொண்டு அதன் பொருளை ஆராயும்பொழுது (i) அந்தச் சொல்லானது பழைமையை அழித்துப் புதுமையை நிலைநாட்டும் செயலைச் சுட்டிக்காட்டுகிறது. ஒப்புரவு என்னும் சொல் பழைமையை அழித்துப் புதுமையை எடுத்துக்காட்டும் ஒரு செயலாக அமைகின்றது. (ii) இரண்டாவதாக இந்த ஒப்புரவு என்னும் சொல் பாவத்தை அறுத்துப் புண்ணியத்தை நிலை நிறுத்தும் எனவும் காட்டப்படுகிறது. (iii) மூன்றாவது இந்த ஒப்புரவு என்னும் சொல் பிணக்கை உடைத்து நல்லதை நல்கும்செயலாகச் சித்தரிக்கப்படுகிறது. ஆகவே புனித சின்னப்பர் ஒப்புரவாகுங்கள் என்று சொல்லும்பொழுது இத்தகைய கருத்துக்களின் அடிப்படையில்தான் இச்சொல்லைப் பயன்படுத்துகிறார்.

2 கொரி. 5 : 6–20, இதன் அடிப்படையில் புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு எழுதிய பகுதியை நன்றாக ஆராய்ந்து பார்க்கும்போது ஒப்புரவு என்பது கடவுள் செய்கின்ற ஒரு செயலாக இருக்கிறது. ஏனெனில் அவர் இதில் கூறுகிறார் கடவுள் மனிதனைத் தம்மோடு ஒப்புரவு செய்தார். ஏனெனில் சிலவேளைகளில் ஒப்புரவு என்று சொன்னால் சண்டைபிடித்துவிட்டு இரண்டுபேர் சமாதானம் ஆவது. ஆகவே இரண்டுபேரும் சமாதானமாக மனமாற்றம் அடைவது என்று நாம் நினைக்கலாம். இங்கு புனித சின்னப்பர் கடவுள் நம்மைத் தம்மோடு ஒப்புரவாக்கினார் என்று கூறுகிறார். எனவே கடவுளைப் பொறுத்தமட்டில் அவருக்கு நம்மட்டில் எந்தவகையான பிணக்கு மனப்பான்மையும் எந்தவகையான நேரத்திலும் கிடையாது. எனவே கடவுள் செய்கின்ற பெரிய ஒப்புரவுப் பணியை முதலும், முடிவுமாக இயக்குபவர் இறைவன், பிரிந்துபோன கடவுள் அல்ல. மனிதன் தான் இறைவனை விட்டுப் பிரிந்து சென்றுவிட்டான், திரும்பி வரவேண்டியவனும் மனிதன் தான். இறைவன் எப்போதும் நம்மட்டில் ஒப்புரவாகிய நிலையிலும்,சமாதானமாகிய நிலையிலும்தான் இருக்கிறார். இதுமிகவும் தெளிவாகவும்சிறப்பாகவும் ஊதாரிமைந்தன் உவமையில் நன்றாக விளங்குகிறது. இறைவன் எப்போதும் தந்தையாகவும், சமாதானமாகவும் இருக்கின்றார். எப்போது தன் மைந்தன் திரும்பிவருவான் என்று காத்துக்கொண்டு இருப்பதை நாம் அறிவோம். இரண்டாவது இந்த ஒப்புரவுச் செயலானது இறைவன் நம்மிடத்தில் ஆரம்பித்து நம்மிடத்தில் முடிவுறச் செய்வது ஒரு புதுப்படைப்பாகும். ஒப்புரவின்மூலமாகக் கடவுள் மனிதனை ஒரு புதுப்படைப்பாக மாற்றுகிறார். பழையன கழிந்துபோயின, புதியன தோன்றியுள்ளன என்று சொல்லுகின்றார். இந்த ஒப்புரவு மூலமாக

கடவுள் மனிதனை ஒரு புதுப்படைப்பாக மாற்றுகிறார். புதுப்படைப்பும், இந்த இணைப்பும் புனித சின்னப்பர் கூறுகிறார் இயேசுவில்தான் நிறைவேறியிருந்தது. உள்ளபடியே கடவுள் உலகினருடைய குற்றங்களைக் கவனியாது அவர்களைக் கிறிஸ்துவுக்குள் தம்மோடு ஒப்புரவாக்கினார். எனவே இந்த இணைப்பும், புதுப் பிணைப்பும் இயேசுவில் நிறைவேறியுள்ளது. இயேசுவை, நம்மை தந்தையோடு இணைப்பவராக, தந்தைக்கும் நமக்கும் இடையேயுள்ள பாலமாக இருப்பதை புனித சின்னப்பர் கூறுகிறார். இந்த இணைப்புச் செய்தியை அறிவிக்கத்தான் எங்களைத் தெரிந்துகொண்டார் கடவுள் என்று புனித சின்னப்பர் கூறுகிறார். தொடர்ந்து மற்ற மனிதர்கள்மூலமாக இந்தப்பணியைச் செய்வதற்குக் கடவுள் சிலரைத் தெரிந்திருக்கிறார் என்றும் கூறுகிறார்.

அடுத்தபடியாக புனித சின்னப்பர் கொலோசியருக்கு எழுதிய திருமுகத்தில் (கொலோ. 1 : 21—22) மனிதன் இறைவனோடு இணைக்கப்பட்டாரேயானால், மனிதன் தன்னைப் படைத்த கடவுளோடு சமாதானமாகிறாலும் இந்த ஒப்புரவும், பிணைப்பும், சமாதானமும் இயேசுவின் பாடுகளினாலும், மரணத்தினாலும், உயிர்ப்பினாலும் நமக்கு அளிக்கப்படுகிறது என்பதைக் கூறுகிறார். முன்னர் நீங்கள் இறைவனோடு உறவு இழந்து நின்றீர்கள். அவர்மீது பகை உள்ளம்கொண்டவர்களாகத் தீயசெயல்களில் மூழ்கி இருந்தீர்கள். இப்போது உங்களை மாசுமறு, குறைபாடு இன்றித் தூயவர்களாய் இறைவன்முன் நிறுத்திட கிறிஸ்துவின் சாவின்வழியாக உங்களைத் தம்மோடு ஒப்புரவாக்கினார். இதன்மூலம் இயேசுக்கிறிஸ்துவின் மரணத்தினால் நாம் தந்தையாகிய இறைவனோடு ஒப்புரவு ஆக்கப்பட்டோம் எனச் சுட்டிக்காட்டுகிறார். அவரின் சாவின் வழியாக உங்களைத் தம்மோடு ஒப்புரவாக்கினார். ஆகவே இறைத்தந்தையோடு நாம் ஒப்புரவு ஆக்கப்பட்டோமேயானால் இயேசுக்கிறிஸ்துவில் அவருடைய பாடுகளும், மரணம், உயிர்ப்பு அனைத்தும் சேர்ந்த நிகழ்ச்சிகள் மூலமாக ஈற்றில் தந்தையாகிய இறைவனோடு ஒப்புரவு ஆக்கப்பட்டோம், இணைக்கப்பட்டோம் என புனித சின்னப்பர் கூறுகிறார்.

## 3. இயேசு மனிதனை மற்ற மனிதர்களுடன் ஒப்புரவாக்குபவர்

இரண்டாவது பகுதியாகப் பிரிந்துபோன மனிதன் தந்தையாகிய இறைவனோடு, மனிதன் கடவுள் ஒப்புரவாகுதல் போன்ற நிகழ்ச்சிகளை முன்பு பார்த்தோம், மனித சமுதாயத்தில் பிரிவினைகள், பாவத்தின் விளைவுகள் பல்வேறு கோணங்களில் இருக்கிறது. இதனால் மனித சமு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயத்தில் உருவாகியது பிளவுகளேயாகும். ஆகவே இயேசுக்கிறிஸ்துவில் மனிதன் உண்மையான மீட்பு அடைந்தான் என்று எடுத்துரைக்க முடியுமானால் அவன் மற்ற மனிதர்களோடு உள்ள பிணக்குகளிலும் பண்புகளிலும் இருந்து விடுவிக்கப்பட்டவராக மற்ற மனிதர்களோடு சமாதானம் ஆக்கப்பட்டவராக ஒப்புரவாக்கப்பட்டவராக இருக்கத்தான் வேண்டும். அப்படி அந்தச் சமாதானம் ஒப்புரவும் பிணைப்பும் கிடையாதுபோனால் மெய்யாகவே அவன் விடுவிக்கப்பட்டவன் என்றும் விடுதலை அடைந்தவன் என்றும் இரட்சிக்கப்பட்டவன் என்றும் கூறிவிடமுடியாது. அருளப்பர் 11/52 எழுதிய நற்செய்தியில் யூதர்கள் இயேசுவைக் கொலைசெய்யத் திட்டமிட்ட பகுதியைக் காண்கிறோம். அன்னாஸ் கைப்பாஸ் சங்கத்தில் இருக்கின்றவேளையில் கைப்பாஸ் எழுந்து உங்களுக்கு ஒன்றும் தெரியவில்லை. நம் இனம் என்றும் அழிந்துபோகாத வகையில் ஒருவன்மட்டும் நமக்காக அழிந்துபோவது நலமென்று நீங்கள் உணரவில்லையா என்று கூறுகின்றார். தொடர்ந்து அருளப்பர் உண்மையிலே அவர் தாமாக இதைச் சொல்லவில்லை, அவ்வாண்டின் தலைமைக் குருவாக இருந்தமையால் இயேசு தம் இனத்தவர்களுக்காக இறக்கப் போகின்றார் என்பதைக் குறிப்பிட்டு இறைவனுக்காகக் கூறினார் என்று கூறி அடுத்த வாக்கியத்தில் உள்ளபடியே அவர் இறப்பது நம் இனத்தாருக்காக மட்டுமன்றிச் சிதறிக்கிடந்த கடவுள் மக்களை ஒன்றாய்ச் சேர்ப்பதற்காகவுமே இறந்தாரென எடுத்துரைக்கின்றார். ஆகவே, அவருடைய மரணம் மனிதனை இறைவனோடு இணைக்கும் செயல்மட்டுமல்ல, பிரிந்துபோன மனிதனைத் தந்தையாகிய கடவுளிடம் கூட்டிச் செல்லுகின்ற ஒரு செயல் மட்டுமல்ல மனித சமுதாயத்தில் உள்ள பிணைப்புகளை நீக்கிய மனிதர்களை மனிதர்களோடு ஒன்றாகச் சேர்ப்பதற்கு அத்திவாரம் இட்ட செயலாகும். ஆகவே இயேசுவின் மரணத்தினால் மனிதன் மற்ற மனிதர்களோடு ஒப்புரவாகின்றான். ஏற்கனவே நாம் ஒப்புரவாகித்தான் இருக்கின்றோம். ஆனால் அதன் பலாபலன்களை நம்முடைய வாழ்வில் இன்னும் தெளிவுபடவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். நம இனத்தினருக்காக மட்டுமன்றி சிதறிக்கிடந்த தம் கடவுளின் மக்களை ஒன்றாகச் சேர்ப்பதற்காகவுமே இயேசு இறந்தார் என்பதை அருளப்பர் மூலமாக அறியமுடிகின்றது.

இயேசு மனிதனைக் கடவுளோடு இணைப்பவராகவும், மனிதனை மற்ற மனிதரோடு இணைப்பவராகவும் இருக்கிறார். இயேசுவினுடைய வருகை மனிதர்களைக் கடவுளோடும், மற்ற மனிதர்களோடும் இணைக்கும் செயல் என்பதற்கு இன்னுமொரு ஆதாரமாக ஊதாரிமைந்தன் உவமையை எடுத்துப் பார்க்கலாம். இதைப்பற்றித் திருத்தந்தை வெளியிட்ட 'இரக்கம் நிறைந்த இறைவன்' என்ற சுற்றுமடலிலே மிகவும் தெளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாகக் காணலாம். ஒருபக்கத்தில் தந்தை ஒரு முக்கிய மனிதனாகச் சித்திரிக்கப்பட்டுள்ளார். மறுபக்கத்தில் ஊதாரிமைந்தன் உவமை. மகன் தந்தையை விட்டுப் பிரிந்துபோய் விடுகிறான். பிரிந்துபோய்ச் சொத்து எல்லாம் அழித்து வெறுங்கையனாகத் திரும்பிவருகிறான். வரும்போது அவன் யாரைப் பார்க்கிறான். தான் செய்த தீய செயல்களுக்கு எல்லாம் தண்டனையை அளிக்கும் ஒரு நீதிபதியை எதிர்நோக்கியா வருகிறான்? "நான் திரும்பி என் தந்தையிடம் செல்வேன்" என எண்ணுகிறான். இங்கு யாரைக் காணுகிறான். தண்டனை கொடுக்கும் நீதிபதியாக அல்ல, அவனை தூரத்தில் வரும்போது மகன் என்று அறிந்து ஓடி, கட்டிஅணைத்து முத்தமிடும் ஓர் அரும்பெரும் தந்தையைக் காணுகிறான். நம்முடைய தந்தை தனிப்பெரும் தந்தை, இரக்கத்தின் தந்தை, தன் மக்களை மன்னித்து வழிநடத்திட அவர்களை இணைத்துக்கொள்ளுகிற தந்தையைச் சித்திரித்துக் காட்டும் உச்சக்கட்டமாக இங்கே ஊதாரிமைந்தன் உவமையினை இயேசு தன்னை இறைவனோடு சித்திரித்துக் காட்டுகிறார்.

மற்ற மனிதர்களோடு மனிதன் உறவாடவேண்டும், பிணைக்கப்படவேண்டும் என்ற பெரும்பகுதியை மகன் வந்துவிட்டான் என்று தந்தை பெரிய விருந்துவைக்கிறார். ஆனால் இத்தனை காலமாகப் பிரமாணிக்கமாக இருந்த மூத்தமகன் கோபிக்கும் அளவுக்குப் பெரியகொண்டாட்டம் வைக்கும் அளவுக்கு நல்ல தந்தையாகக் காட்டப்படுகிறார். இந்த நிகழ்ச்சி, ஒருவன் திரும்பிவரும்போது, தன் பாவ வாழ்க்கையை விட்டுத் திரும்பிவரும்போது கடவுள் எத்தகையவர் என்பதைக் காட்டுகிறது. இந்தக் கொண்டாட்டம், எதைக் காட்டுகிறது என்றால் கடவுள் நம்மை முற்றாக மன்னித்து ஏற்றுக்கொள்ளும் பெருந் தந்தையாகக் காட்டுகிறது. உம்முடைய மகன், தன்னுடைய தம்பி என்று சொல்லாமல், ஊதாரித்தனமாக வாழ்ந்த அவன் வரும்போது பெரிய கொண்டாட்டம் வைக்கிறீரே என்று பெரிய முறையீடு செய்கிறான் மூத்தமகன். நான் உள்ளே வரமாட்டேன் என்று நிற்கிறான். இது மனிதனுக்கும் மனிதனுக்கும் இடையேயுள்ள பிணக்கைப் படம்பிடித்துக் காட்டுகிறார். அந்தவேளையிலே தந்தை சொல்லுகிறார்: மகனே நாம் விருந்து கொண்டாடுவது நலமே, ஏனெனில் தம்பி உன் தம்பி இறந்துவிட்டவன் உயிர்த்துவிட்டான், காணாமல்போனவன் மீண்டும் கண்டுபிடிக்கப்பட்டுவிட்டான் என்று சொல்லி இருவருக்கும் உள்ள உறவைக் காட்டுகிறார். இவன் என் மகன் மட்டுமல்ல, உன் தம்பியும்கூட. இரண்டாவது நீ அவன் வந்துவிட்டான் என்று பிணக்குப்பட்டு, கோபப்பட்டுக்கொண்டு வெளியே இருக்கமுடியாது. நீயும் திரும்ப வரவேண்டும். எனவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருந்து கொண்டாடுவது 'நலமே' என்று சொல்லி அவனையும் உள்ளே அழைப்பதை நாம் காணுகிறோம். எனவே இந்த மேற்கோளிலிருந்து நாம் சுலபமாக அறிந்துகொள்வது இயேசுக்கிறிஸ்துவின் வருகை, மனிதனைக் கடவுளோடு இணைக்கவும், மனிதனை மற்ற மனிதர்களோடு சமாதானப்படுத்திப் புதிய உலகில் மனித சமுதாயத்தை ஏற்படுத்தவே இயேசு வந்தார் என இவைகள் மூலமாகக் காணலாம்.

இப்படி மனிதர்கள் மற்ற மனிதர்களோடு ஒப்புரவாகும்போது, சமாதானமாகும்போது என்ன நடக்கிறது என்பதைச் சக்கேயு நிகழ்ச்சியிலிருந்து அறியலாம். சக்கேயு பெரிய ஆயக்காரன், பணக்காரன், மற்ற மனிதர்களை நசுக்கும் ஒருவனாகத்தான் இருந்திருக்கவேண்டும், அப்படிப்பட்டவன் வீட்டுக்கு இயேசு சென்று விருந்துகொண்டாடி அவன் மனம் மாறியபோது என்ன நடந்தது. " குருவே நான் யாருக்கும் குற்றம்செய்து, மற்றவர்களுடைய பொருட்களை அபகரித்து இருந்தால் ஒன்றிற்கு நாலுமடங்காகக் கொடுத்துவிடுகிறேன் " என்று கூறினன். இந்த ஒரு புதியநிலை மக்கள் மத்தியில் உருவாகவேண்டும். இயேசுவினுடைய வருகைக்காக மனிதர்களோடு மனிதர்கள் ஒப்புரவாகும் பொழுது தங்களிடையே எவ்வகையான பிணைப்பு ஏற்படுகிறது என்பதை இந்தச் சக்கேயு நிகழ்ச்சியிலிருந்து நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. இப்படிப்பட்ட ஒரு புதிய அரசைத்தான் இயேசு தன்னுடைய வாழ்க்கையில் தன் சொல்லாலும் செயலாலும் முன்மாதிரியாலும் எடுத்துரைத்தார்.

இதை இறையரசு என்கிறோம். இயேசு போதித்த இந்த இறையரசை ஒரு புதியநிலை ஒரு புதிய சமுதாயம் என்கிறோம். இந்தப் புதிய சமுதாயத்தின் பண்புகள் என்ன என்று பார்ப்போம். இந்த இறையரசின் சமுதாயத்தில் சேர்ந்தவர்கள் முற்றும் விடுதலை அடைந்தவர்களாக இருப்பார்கள். எல்லா வழிகளிலும், பிணக்குகள் பிளவுகளினது விடுதலை பெற்ற மக்களைக்கொண்ட சமுதாயத்தை இயேசுவின் வருகைக்காக இவ்வுலகம் உருவாக்குகின்றது. ஆகவே இயேசு மக்களை இறைவனோடும், மற்ற மனிதர்களோடும் ஒன்று சேர்க்கும்பொழுது அவர்கள் பூரண, முழுமை அடைந்த சமுதாயமாக உருவாக்கப்படுகின்றார்கள். திருச்சபை இந்தச் சமுதாயத்தின் எடுத்துக்காட்டாக விளங்க அழைக்கப்பட்டிருக்கின்றது. இரண்டாவது முற்றும் விடுதலை அடைந்த சமுதாயத்தில் உள்ளவர்கள் தங்களுக்குள்ளே புதிய உறவில் அன்பினால் கட்டுண்டவர்களாக, அன்புறவைக் கொண்டவர்களாகச் சகோதர உறவைக்கொண்டவர்களாக அன்பு என்னும் புதிய பண்பினால் எந்தகைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தியாகமும் நிறைந்த அளவுக்கு, அதுவும் சிலுவைப்பாதையை ஏற்கும் அளவுக்குத் தம்மைத்தாமே அர்ப்பணித்த இயேசுவைப் பின்பற்றுகிற வர்களாகின்றனர். அந்த அழைப்புக்கு நாம் அனைவரும் முற்றுக அர்ப் பணிக்கப்பட்டவர்கள் என்ற அளவுக்கு எத்தகைய தியாகத்தையும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அன்புறவுகொண்ட ஒரு புதிய சமுதாயம் உரு வாகவேண்டும். இந்த உறவுகொண்ட சமுதாயத்திலே நீதியும், நேர் மைத்தனமும் நிலவும். ஆனால் இன்றைய சமுதாயஅமைப்பிலே நீதியும் நேர்மைத்தனமும் இல்லை. ஒ க்கல்களும் சுரண்டல்களும் உண்டு என் பதைக் காண்கிறோம். இந்த ஒடுக்கல்களும்—சுரண்டல்களும் இயேசுவின் வருகையினால் மனித சமுதாயத்தில் இவை அழிந்து புதிய ஒரு நிலை உருவாகவேண்டும். பரிசுத்த பாப்பரசர் கூறுமளவுக்கு மிகவும், நீதி, நேர்மையும் மனிதர்களிடையே அன்பையும் விடுதலையையும் உருவாக் கும் அளவுக்குச் சமுதாயம் மாறவேண்டும். இத்தகைய இறையர சைத்தான் இயேசு தன்னுடைய போதனைகளினாலும், உவமையினாலும் எடுத்துரைத்தார். இந்த இறையரசில் நாம் சேரும்போது இறைவனோ டும், மற்றவர்களோடும் ஒப்புரவாகுவோம் சமாதானமாகுவோம்.

தொகுப்பு : யோ. ம. செபஸ்ரியன்,
அ. றெ. யோ. மரியநாயகம்

— ★ —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருச்சபை—ஒப்புரவின் அருட்சாதனம்

அருள்திரு எஸ். ஜே. இம்மானுவல்

"ஒப்புரவின் அருட்சாதனமாகத் திருச்சபை விளங்குகின்றது" என்ற கூற்றினை நாம் நன்கு புரிந்துகொள்ளவேண்டுமானால், ஓர் 'அருட்சாதனம்' என்றால் என்ன? 'ஒப்புரவு' ஏன் தேவை என்பவற்றைத் தெளிவுபடுத்திக் கொள்ளவேண்டும்; மேலும் இறைவனது அளவில்லா இரக்கம் என்னென்ன வடிவிலெல்லாம் காலங்களினூடு அலைமோதிப் பாய்ந்தோடி வந்திருக்கிறது என்பதையும் பின்னோக்கிப் பார்த்து ஞாபகப்படுத்திக் கொள்ளவேண்டும்.

## அருட்சாதனம்

(அருளடையாளம், Sacrament) என்பது பிறிதொரு பொருளை/மெய்ம்மையைக் குறித்து நிற்கும் ஓர் அடையாளம் மட்டுமல்ல, அந்தப் பொருளை/மெய்ம்மையை ஓரளவிலாவது நமக்கு அளித்திடவும் வல்ல ஒன்றாகும். (An Efficacious Sign) என்பது நீங்கள் நன்கறிந்ததே. ஒப்புரவு என்பது வேற்றுமை களைந்து ஒற்றுமையாதல் எனச் சுருங்கக் கூறலாம். இறைவனிடமிருந்தும் சக மனிதர்களிடமிருந்தும் அந்நியப் பட்டு நிற்கும் மனிதனுக்கு இவ்விரு சாராரோடும் ஒப்புரவாதல் அவசியமாயுள்ளது; இந்த ஒப்புரவை இறைவனே மனிதனுக்கு வாரி வழங்கக் காலங்களினூடு முன்வந்துள்ளார். மேற்படி இரண்டு எண்ணக் கருத்துக்களையும் சேர்த்துப் பார்ப்போமானால், "ஒப்புரவின் அருட்சாதனமாகத் திருச்சபை விளங்குகின்றது" என்பதன் பொருள், "இறைவன் தரும் ஒப்புரவுக்கு ஓர் அடையாளமாகவும், அதேவேளை அந்த ஒப்புரவைத் தந்திடும் ஒரு கருவியாகவும் திருச்சபை திகழ்கின்றது" என்பதே என்று புலனாகும்.

## தந்தையின் இரக்கம்

தன் அன்பெனும் ஊற்று அணைகடந்து பாய்ந்ததால் பரம்பொருளாம் கடவுள் உலகைப் படைத்தார். சூர்ப்பின் சிகரமாக மனிதனை ஏற்படுத்தினார். கடவுள் தன் அன்பை ஒரு விலங்குபோலாக்கி, மனிதனைத் தன்னிடம் கட்டியிழுக்காது, மனிதன் கையில் சுதந்திரத்தைக் கொடுத்தார். அந்தச் சுதந்திரத்தை மனிதன் பிரயோகித்து, தானாக விரும்பிக் கடவுளோடு நட்பைத் தேர்ந்தெடுக்கவேண்டுமென்று விருப்பங்கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் சுதந்திரத்தைக் கொண்டிருந்த மனிதனே கடவுளது நட்பைப் புறக்கணித்துவிட்டு, தன்னிச்சைப்படி வாழத் தலைப்பட்டான். பாவம் புரிந்தான் பாவத்தால், இறைவனோடு கொண்டிருந்த உறவை இழந்தான், அதேவேளை மற்ற மனிதர்களோடு கொண்டிருந்த உறவையும் சிதைத்தான். மனிதனின் பாவம் பல்வேறு வடிவில் படர்ந்து உலகை ஆக்கிரமித்தது. தானே தனது தீச்செயலின் கைதியாகினன் மனிதன். (இதே இதழில் "பாவத்தின் பன்முக உருவங்கள்" என்ற கட்டுரை காண்க.)

கடவுளின் அன்புச்சுனையோ காய்ந்துவிடவில்லை, மாறாக, பாவம் பெருகிய இடத்தில் அருள் அணைகடந்து பெருகலாயிற்று (உரோ.5–20). பல்வேறு தளைகளால் கட்டுண்டவராய் இருளில் தவித்த மனிதனுக்கு மீட்பின் வழியைக் காண்பிக்க இறைவன் திருவுளங்கொண்டான். மனிதன் மனிதனோடும் கடவுளோடும் ஒப்புரவாகுதலே இந்த மீட்பின் வழி என்று படிப்படியாக மனிதனுக்கு உணர்ந்த முற்பட்டான் இறைவன்.

## மீட்புத் திட்டம்

ஆதி மனிதனின் காலத்திலிருந்தே மீட்பினை நாடிவருமாறு மனிதனுக்கு இறைவன் அழைப்பு விடுத்துக்கொண்டுதான் இருந்தான். உலக மதங்களிலெல்லாம் காணப்படும் "உண்மையானவையும் நன்மையானவையும்" எனவையோ, அவையெல்லாம் இறைவனின் இந்த அழைப்பின் பிரதிபலிப்புக்களே. எனினும் தனது மீட்புத்திட்டத்தின் முழு நிறைவினை உலகிற்கு அளிப்பதற்காக, குறிக்கப்பட்ட ஒரு மக்களினத்தைத் தேர்ந்தெடுத்தான் இறைவன். அவ்வினமே பண்டைக்கால இஸ்ராயேல் இனம்.

இஸ்ராயேல் இனத்தாருக்குத் தன்னைக் கண்டிப்புள்ள, அதேவேளை இரக்கம்நிறைந்த ஒரு தந்தையாக வெளிப்படுத்தினன் இறைவன். அம்மக்களின் தலைவர்கள், அரசர்கள், இறைவாக்கினர்கள், மறைநூல் ஆசிரியர்கள் வழியாக இஸ்ராயேலரைப் பாவ வழியைவிட்டு நல்வழிக்குத் திரும்பும்படி அழைப்புவிடுத்து, தனது மீட்புத்திட்டத்தை அறிவித்து வந்தார் இறைத்தந்தை. (இதே இதழில் "நம்மை மன்னிக்கும் இரக்கத்தின் தந்தை" என்ற கட்டுரை காண்க.)

## மீட்பர் இயேசு

காலம் கனிவுற்றபோது, கருணை மிகுந்த கடவுள், நாசரேத்தூர் இயேசுவிலே தம்மை வெளிப்படுத்தினர் — இறைமகன் கிறிஸ்துவாகத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்மை வெளிப்படுத்தினர். மனிதனை மனிதனோடும், இறைவனோடும் ஒப்புரவாக்கும் இறைத்திட்டத்தின் ஒரு முக்கிய பகுதியை இயேசு தொடக்கி வைத்தார்.

இவர் ஒப்புரவை ஒரு புதிய வாழ்வு அல்லது ஒரு புதிய "அரசு" எனும் பாணியில் தொடக்கிவைத்தார். "மனந்திரும்புங்கள், கடவுளரசு நெருங்கிவிட்டது ; இந்நற்செய்தியை ஏற்றுக்கொள்ளுங்கள்" (மாற்கு 1 : 14) என்று போதித்தார். இந்தக் கடவுளரசின் விழுமியங்களான (மதிப்பீடுகள் Values) அன்பு, நீதி, நேர்மை, எளிமை, தூய்மை, வாய்மை என்பவற்றால் ஒப்புரவை எய்தலாம் என்று எடுத்துகாட்டினர்.

கடவுளோடும் மனிதரோடும் மிக உன்னதமான முறையில் ஒப்புரவான ஒரு மனிதனென்றால் அது இயேசுக்கிறிஸ்துவேதான். இதனால் கடவுள் வழங்கும் ஒப்புவின் அடையாளமாக இயேசு விளங்குகிறார். அதேவேளை அந்த ஒப்புரவின் முழுமையினை நமக்கு வழங்குபவரும் அவரே. இவ்விரு காரணங்களால் ஒப்புரவின் அருட்சாதனமாய்க் கிறிஸ்து விளங்குகின்றார் என்பது தெளிபு. (இதே இதழில் "இயேசுக் கிறிஸ்து ஒப்புரவாக்குகிறார்" என்ற கட்டுரை காண்க.)

## ஆவியின் சபை

தந்தையின் வடிவில் வெளிப்படுத்தப்பட்டு, கிறிஸ்துவின் சொல்லாலும் செயலாலும் அடியிடப்பட்ட இறைவனின் இரக்கம், தூய ஆவியின் ஆற்றலாலே மனுக்குலத்திற்குத் தொடர்ந்தளிக்கப்படுகிறது. இத்திட்டத்திற் கிணங்கத் தூய ஆவியானவர் இயேசுவின் முதற் சீடர்களின் மீது வந்திறங்கினர். ஒரே ஆவியைப் பெற்ற சீடர்கள் அனைவரும் ஒருடல் ஆயினர் ; காணக்கூடிய உருவில் ஆவியின் திருச்சபை அன்று பிறந்தது. ஆவியின் செயற்பாட்டால், கடவுளின் இரக்கத்தையும் புது வாழ்வையும் மானிடர்க்கு வழங்கிடும் கால்வாய்களைத் திருச்சபை படிப்படியாக ஏற்படுத்தி வந்தது.

ஓர் இயக்கத்தின் விழுமியங்கள் நூற்றாண்டுகளினூடு பரவுவது அவை ஆவி (Spirit) வடிவினதாய் இருப்பதனாலேயே. அவ்வாறே கடவுளரசின் விழுமியங்களும் பரவியது/பரவுவது கடவுளின் ஆவியாலேயே. இந்த விழுமியங்களைக் காலங்களினூடு செல்லவேண்டிய சமூகம் ஆவி மயமானதாகவே (Spiritual) இருந்தது. ஆவியின் திருச்சபை (charismatic Church) இதுவே. திருச்சபை ஆவியானவரின் ஒரு விசேட இருப்பிடமும் செயற்களமுமாய் உள்ளது. ஆவியானவரே இத்திருச்சபையில் செபிக்கிறர், சாட்சியமளிக்கிறர், வழிநடத்துகிறர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆவி இயல்பும், நிறுவன மயமாதலும்

ஆதித் திருச்சபையின் ஒவ்வொரு கிறிஸ்தவனும், கிறிஸ்தவளும் ஆவியானவர் அபரிமிதமாக வழங்கிய கொடைகளினால் உந்தப்பட்டுச் செயற்பட்டனர். அவர்கள் விதிகள் கட்டுப்பாடுகளினால் நடாத்தப் படாது, நேர்வழிசெலுத்தும் ஒருவித உள்ளார்ந்த சக்தியினால் இயக்கப் பட்டு வாழ்ந்து வந்தனர். எனினும், ஆவிமயமான திருச்சபை அதே வேளை மனிதர்களாலான திருச்சபையே : இதனால் அதற்கு ஓர் அமைப்பு வடிவம் (ஒரு நிறுவன வடிவம்) ஏற்படுவது ஓரளவில் தவிர்க்கமுடியா ததே. ஆவியின் செயற்பாட்டினாலே தனக்களிக்கப்பட்ட தனது இயல் பைக் காலவோட்டத்திலே இழந்துவிடாதிருப்பதற்காக, திருச்சபை மெல்ல மெல்ல நிறுவனவடிவினதாய் மாறியது (became institutionalieze).

காலப்போக்கில், ஆவி இயல்புக்கும் நிறுவன இயல்புக்குமிடையே திருச்சபையில் ஒரு மோதல்நிலை ஏற்பட்டது. ஆனால் இவ்விரு இயல்பு களும் ஒன்றுக்கொன்று மாறானவையல்ல ; மாறாக ஒன்றுக்கொன்று அவசியமானவை. இதற்கு உதாரணமாக, விரைவில் ஆவியாகிவிடும் நறுமண மதுசாரத்தை நாம் கொள்ளலாம். புட்டியொன்றில் இட்டு அடைக்கப்படாவிட்டால் மதுசாரம் யாருக்கும் பயன்படாது வீணாகி விடும்; மாறாக மதுசாரம் எதுவும் இல்லாவிடின் புட்டியால் பயனில்லை. ஒன்று மற்றதிற்குத் தேவை. இவ்வாறே, திருச்சபையின் ஆவி இயல் பிற்குச் சேவைபுரியவே நிறுவன வடிவு ஏற்படுத்தப்பட்டது. இரண்டும் ஒன்றுக்கொன்று தேவை. ஆனால் இன்று நிறுவனத்தின் அமைப்புக்கள், ஆவி இயல்பிற்குப் பணிபுகின்றனவா என்பது கேள்விக்குரியதாகி விட் டது. இறைவனின் அளவில்லா இரக்கத்தின் அருட்சாதனமாக விளங்கவேண்டிய திருச்சபையின் அமைப்புக்கள் இறைவனின் இரக்கத் தினை உண்மையில் வாரிவழங்குகின்றனவா, இல்லை அதற்குத் தடை களாய் இருக்கின்றனவா என்று நம்மை நாமே கேட்டுக்கொள்ளுதல் அவசியம்.

## இறைவனின் இரக்கமும் நிறுவனத் திருச்சபையும்

இறைவனின் அளவில்லா இரக்கத்தினை நாம் திருச்சபை என்ற குறுகிய நிறுவனத்தினுள் அடக்கிவிட முடியாது. இது ஏன் என்று பார்ப்போம்.

மூலமுதற் பரம்பொருளாம் கடவுளை நாம் கிறிஸ்து என்ற அவரது வெளிப்பாட்டிற்குள் மட்டும் அடக்கிவிடமுடியாது. அவ்வாறே கிறிஸ்து வின் செயற்பாடானது ஆவியின் சபைக்குள் மட்டுமே நடைபெறுகிறது என்று நாம் வரையறுத்துவிட முடியாது. (காரணம், எக்காலத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் எம்மதத்தையும் சேர்ந்த நன்மனத்தோர் யாவரையும் கடவுள் மீட்டது/மீட்பது கிறிஸ்து மூலமாகவே.) அவ்வாறே ஆவியானவரின் அளவிறந்த கொடைகள் எல்லாம் நிறுவனத் திருச்சபையின் உள்ளே தான் உண்டு என்று நாம் வேலிபோட்டுவிட முடியாது. (ஏனெனில் அமைப்பு வடிவங்கொண்ட திருச்சபைக்கு வெளியேயும் ஆவியானவர் செயற்படுகின்றூர். ஆவியின் திருச்சபை நிறுவனத் திருச்சபையைவிட வும் பரந்ததாகும்.)

புரிந்துகொள்ள முடியாத இறைவனை மனிதன் ஓரளவாவது புரிந்துகொள்ளுமுகமாகக் கீழிறங்கிவரும் இறைவெளிப்பாட்டின் படி களே இவைகள். இவற்றுக்கிடையேயுள்ள தொடர்பைக் கணிதமுறை யில் போன்று குறித்துக் காட்டுவதாயின் (≠ என்றால் 'சமனல்ல' என்று பொருள், > என்ருல் 'பெரிது' என்று பொருள்) :

பரம்பொருள் ≠ கிறிஸ்து ≠ ஆவியின் சபை ≠ நிறுவனத்திருச்சபை;

மாருக ;

பரம்பொருள் > கிறிஸ்து > ஆவியின் சபை > நிறுவனத்திருச்சபை.

எனவே, இறைவனின் அளவில்லா இரக்கத்தினைத் திருச்சபை என்ற குறுகிய நிறுவனத்தினுள் நாம் அடக்கிவிடமுடியாது. ஆனாலும் நிறு வனத் திருச்சபையானது, தான் இறைவனது இரக்கத்தினை மென் மேலும் பிரதிபலிக்கவும் வழங்கவும்கூடியதாக மாறிட நாளும் உழைத்து வரவேண்டும். அதாவது இறை இரக்கத்தின் உகந்த அருட்சாதனமாக மென்மேலும் மாறிடத் திருச்சபை நாளும் உழைக்கவேண்டும்.

## திருச்சபை அருட்சாதனமாகுதல்

திருச்சபை ஒப்புரவின் உகந்த அருட்சாதனமாகுதல் எங்ஙனம்? அது இறைவன் அளிக்கும் ஒப்புரவை, புதுவாழ்வை மனுக்குலத்தின் நலனுக்காகத் தங்குதடையின்றிப் பகிர்ந்தளிக்கவேண்டும். இறைவனுக் கெதிராகவும் மனிதருக்கெதிராகவும் பாவம்புரியும் மனிதர்க்கு வெவ் வேறு நேரங்களில் வெவ்வேறு வடிவத்தில் இறைவனின் இரக்கமும் மன்னிப்பும் தேவைப்படும். இத்தேவைகளுக்கேற்ப, ஏற்ற நேரத்தில் ஏற்ற வடிவில் இறைவனின் இரக்கம் தன்னூடு வெளிப்படுதல் என் னென்ன விதத்திலெல்லாம் கூடும் என்று திருச்சபை தேடிக் கண்ட டைய வேண்டும்.

போதகன், தலைவன், குரு என்ற முப்பணிபுரியும் கிறிஸ்துவின் வழி திருச்சபையும் தனது ஒப்புரவுப்பணியை மும்முனையிலும் புரிதல்வேண் டும். திருச்சபையின் உறுப்பினரான நாம் ஒவ்வொருவரும் இதை உணர்தல்வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதனையில் : போதனைப் பணியில் திருச்சபை இரக்கத்தின் அருட்சாதனமாகிறது. போதனைப் பணி என்பது இறைவனுக்கு உரைத்தலே என்பதை நாமறிவோம். இறைவாக்குரைப்பதாவது, " இன்றைய உலகின் சூழ்நிலைகளைப் பொறுத்தமட்டில் இறைவனின் திருவுளம் என்ன ? " என்பதைத் தயங்காது எடுத்துரைப்பதே.

மனிதன் பாவ இயல்பு உடையவனாய் இருக்கின்றான். ஆயினும் அந்தப் பாவநிலையை விட்டெழுந்து கடவுளின் அரசினை அண்டி வருமாறு இறைவன் அழைக்கின்றார். 'பாவம்' எனும்போது தனி மனித பாவத்தினை மட்டும் நினைக்க நாம் பழகியுள்ளோம்—ஆனால் இது தவறானதொரு கண்ணோட்டம். பழிவாங்கல், காமவேட்கை, கொலை களவு—இவைமட்டுமல்ல பாவம்; பசி பட்டினி, அநீதி, ஒடுக்குமுறை, வன்செயல், சுரண்டி வாழுதல், கண்டும் காணாதிருத்தல், உலகாயதப்போக்கு—இவையும் சமூகப் பரிமாணமெடுத்துள்ள பாவத்தின் பல்வேறு வடிவங்களும் விளைவுகளுமே என்பதை நாம் உணர்ந்து, உணர்ந்ததை எடுத்துரைக்க வேண்டும்.

பாவத்தைக் கண்டிப்பதோடுமட்டும் நமது போதனைப்பணி நின்றுவிடக்கூடாது. மனிதர் தாம் புரியும் பாவங்களை விட்டெழுந்து, அவற்றுக்காக மனம்வருந்தி அவற்றை வெறுத்தொதுக்கும்போது அந்தப் பாவங்களுக்கெல்லாம் பூரண மன்னிப்பு வழங்கி, தமது அன்பு மழையில் நம்மை நனைத்திட இறைவன் ஆவலாய்க் காத்திருக்கிறார் (காண்க லூக். 15). என்ற உண்மையை மாந்தர்க்கு எடுத்தியம்பலும் இறைமக்களாகிய நமது இறைவாக்குப் பணியின் ஒரு முக்கிய பகுதியாகும்.

வழிநடாத்தலில் : வழிநடாத்தல் பணியிலும் திருச்சபை ஒப்புரவின் அருட்சாதனமாகிறது. இப்பணியாவது, ஒரு சிறந்த இறைமக்கள் சமுதாயத்தை முன்மாதிரியாலும் நெறிப்படுத்தலாலும் கட்டியெழுப்புதலாகும்.

நமது நாளாந்த வாழ்வானது நாம் எடுத்துரைக்கும் ஒப்புரவிற்குச் சான்றாக அமையவேண்டும். திருச்சபையின் உறுப்பினராகிய நாமே பிளவுகளுக்கும் பிணக்குகளுக்கும் காலாயிருப்போமாகில், ஒப்புரவு பற்றிய நமது வார்த்தைகளால் பயன் எதுவுமில்லை. நமது சொந்த வாழ்வின் உறவுகளில், நமது குடும்பத்தின், பங்கின், சமுதாயத்தின் உறவுகளில் எல்லாம் ஒப்புரவு மிளிரவேண்டும். பாவத்தின் விளைவுகளாக நாம் இனங்காணும் சுயநலம், அநீதி, ஒடுக்குமுறை என்பவற்றுக்கு நாம் காணும் தீர்வுகளிலெல்லாம் ஒப்புரவும் குணமாக்கலும் துலங்க வேண்டும். இறைவனின் ஒப்புரவு நம்மில் ஒளிர்வதைக்கண்டு பலர் இறைவனை நாடி வரல்வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிநடாத்தல் பணிபற்றிப் பேசும்போது திருச்சபையின் வழி நடாத்தலில் முக்கிய பங்கொன்றை வகிக்கும் குருகுலத்தோரைப்பற்றி நாம் பேசாதிருக்கமுடியாது. குருக்களும் ஆயர்களுமான இப்பணியாளர்கள் ஒவ்வொருவரும் தமது வாழ்வில் இறைவனோடும் மனிதரோடும் உண்மை ஒப்புரவை அனுபவிப்பவர்களாக இருத்தல்வேண்டும். இந்த உண்மை அனுபவம் அவர்கள் வாழ்வின் செயல்களினூடு, அவர்களது நாளாந்த உறவுகளினூடு தென்படவேண்டும். எனவேதான் ஒப்புரவு ஒரு கடமையாகவும் அதேவேளை ஒரு சவாலாகவும் உள்ளது என்கிறோம்.

வழிபாட்டில் : வழிபாட்டுப் பணியிலும் திருச்சபை ஒப்புரவின் அருட்சாதனமாகிறது. கடவுளுக்கும் மனிதனுக்குமெதிராகப் பாவம் புரியும் மனிதர்கள். பாவத்தைவிட்டு மனந்திரும்பும்போது, கடவுளிடமும் சமுதாயத்திடமும் மன்னிப்புக் கேட்டு, பெற்றுக்கொள்வது முறையே. ஆயினும், இறைவனின் எல்லையில்லா இரக்கத்தை வாரி வழங்கவேண்டிய திருச்சபைப் பணியாளர்கள்,பாவசங்கீர்த்தனச் சடங்கு ஒன்றினுள் மட்டும் அதனை அடக்கிவிடக்கூடாது. இவ்வாறு செய்தல், பொங்கிவரும் காவிரி வெள்ளம் போன்ற இறை இரக்கத்திற்கு அணை கட்டி, ஒரு சிறு குழாய் (tap) மூலம் துளித்துளியாக விநியோகிப்பது போலாகும்.

எனவே, ''ஒப்புரவு அருட்சாதனம்'' என்று இன்று அழைக்கப்படும் ''பாவசங்கீர்த்தனச் சடங்''கின் முக்கியத்துவத்தை எந்தவகையிலும் குறைக்காத அதேவேளை, இறைவனின் இரக்கத்தையும் மன்னிப்பையும் என்னென்ன வழிகளிலெல்லாம் நமது குடும்பங்களிலும் நட்புக்களிலும், நமது பங்குகளிலும் சமூகங்களிலும் அனுபவித்துக் கொண்டாடலாம் (celebrate) என்று நாம் ஆய்ந்து, அறிந்து, அமுல் செயல் வேண்டும்.

இது சம்பந்தமாக ஆசிரிய நண்பர் ஒருவர் கூறிய உண்மைச் சம்பவம் நினைவுக்கு வருகிறது. அவரது மனைவி புற்றுநோயுற்றுப் படுக்கையாய்க் கிடந்தவேளை—அன்று அவர்களது திருமணத்தின் 25ஆவது ஆண்டு நிறைவு நாள். வீட்டில் இருவரும் தனித்திருந்த வேளை மனைவியிடம் பேசத் தொடங்கினார் ஆசிரியர். அந்த இருபத்தைந்துவருட வாழ்விலே அவளுக்கெதிராகத் தான் செய்த குற்றங்களை, இன்னும் ஏசிய ஏச்சுக்களை, உண்ணாது அடம்பிடித்த நாட்களையெல்லாம் எடுத்துக்கூறி அவளிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டார். உணர்ச்சிக் கண்ணீரினூடு முறுவலித்து மன்னிப்பு வழங்கிய அவளும், தான் அவருக்கெதிராகச் செய்த குற்றங்களையும் சொல்லி மன்னிப்பு வேண்டினாள். இருவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைகள்போல அழுது சிரித்தனர். (அன்றுதான் அவர்களது இவ்வுலக மணவாழ்வின் கடைசிநாள் — அன்றிரவே புற்று நோய் அவனை எடுத்துச் சென்றுவிட்டது.) காதற் கணவனும் மனைவியும் ஒருவர் ஒருவரிடம் அன்று அனுபவித்தது இறைவனது இரக்கத்தின் ஓர் அனுபவமே என்பதை யாரும் மறுக்கமுடியுமா ?

## ஒப்புரவும் மனம் வருந்தலும் (reconciliation & repentance)

ஒப்புரவு இறைவன் வழங்கும் கொடையாகும். அக்கொடையை மனிதன் தனதாக்கிக்கொள்ள வேண்டுமாயின், அவன் செய்ய வேண்டிய பதிற்செயலே மனம் வருந்தலாகும். ஒப்புரவை ஒருவேளை கடவுள் வழங்காது இருந்திருப்பாராகில், மனிதனது மனம்வருந்தலோ, அவனது எவ்வித செபமோ தபமோ எந்தப் பலனையும் அளித்திருக்காது. மறுபுறம், இறைவன் ஒப்புரவை வழங்க முன்வந்துங்கூட நம்மிடத்தில் மனம் வருந்தல் இல்லையெனில், அந்த ஒப்புரவைப் பெற்றுக்கொள்ள நாம் சற்றேனும் தகுதியற்றோராய் இருப்போம்; அந்த ஒப்புரவை நமதாக்கிக்கொள்ள நம்மால் முடியாது. எனவேதான் கிறிஸ்துவின் அழைப்பின் மையப்பொருள் " மனம் வருந்தி, மனந்திரும்பி, ஒப்புரவாகுங்கள் " என்பதாகும்.

## முடிவுரை

திருச்சபையானது புனித ஆவியால் ஏவப்பட்டதாய் இருப்பினும், திருச்சபையின் உறுப்பினர்களான மனிதர்கள் பாவநிலையில் நடப்பவர்களாய் உள்ளனர். இதனால் திருச்சபையில் பாவம் நிலவுகிறது. எனினும், ஒப்புரவையும் மனம் வருந்தலையும் போதிக்கும் திருச்சபை, தனது பாவநிலையையும் நினைத்து மனம் வருந்துகின்றது ; இறைவனோடும் மனிதரோடும் ஒப்புரவை நாடுகிறது. இதையே 2ஆம் வத்திக்கான் சங்கம் கூறுகிறது : " திருச்சபையோ பாவிகளைத் தன்னுள் கொண்டிருப்பதால், தான் புனிதமாயிருப்பினும் எப்பொழுதும் தூய்மைப்படுத்தப்படவேண்டிய தேவையைத் தன்னில் கொண்டு, தவம், சீர்திருத்தம் என்ற பாதையிலேயே தொடர்ந்து நடந்துகொண்டிருக்கிறது " (திருச்சபை, எண் 8 கடைசிப்பகுதி).

பாவிகளின் இந்தத் திருச்சபையினது உலகப் பயணம் நிறைவுறும் வேளை, தலைவன் கிறிஸ்து நம்மை முடிவில்லா அந்த முடிவை நோக்கி அழைத்துச் செல்வார் ; இறையரசு நிறைவுறும்.

தொகுத்தவர் : ஜெராட் செ. சவிரிமுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாறு கூறும் உண்மைகள்

— R. ஜோசவ் —

மீட்பு வரலாற்றில் பாவத்தின் விளைவால் மனிதனுக்கும் இறைவனுக்குமிடையேயுள்ள உறவு துண்டிக்கப்பட்டதைப் பல சம்பவங்கள் எடுத்துக் காட்டுகின்றன இத்தகைய துண்டிக்கப்பட்ட உறவு மீண்டும் இறைவனோடு ஒப்புரவாதல்மூலம் நிறைவாக்கப்பட்டது. இறைவனோடு ஒப்புரவாகுவதற்குப் பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் மக்கள் பல்வேறுபட்ட பரிகாரங்களின் மூலம் இறைவனோடு மீண்டும் ஒப்புரவாகினர். பழைய ஏற்பாட்டிலே இஸ்ராயல் மக்க தாங்கள் அனுபவித்த துன்பங்களையும் அடிமைத்தனத்தையும் தங்களுடைய பாவத்தின் விளைவால் ஏற்பட்ட தண்டனையாகவே கருதினர். இதனால் மீண்டும் கடவுளோடு ஒப்புரவாகுவதற்குத் திருவழிபாட்டிலே தங்களுடைய செபங்களின் மூலமாகவும் புலம்பலின் மூலமாகவும் இறைவனை வேண்டி பரிகாரம் தேடமுயன்றனர். புதிய ஏற்பாட்டிலும் கிறிஸ்து 'ஒப்புரவாதலின்' அவசியத்தைப் பல உவமைகள்மூலம் எடுத்துக் கூறியுள்ளார். திருச்சபை வரலாற்றில்கூட ஒப்புரவாகுதல் பல்வேறு காலகட்டங்களில் வெவ்வேறு நிலைகளில் அளிக்கப்பட்டு வந்ததை அறியக்கூடியதாக உள்ளது.

## 2-ம், 3-ம் நூற்றாண்டுகளில் ஒப்புரவாகுதல் சடங்கு

இக்காலகட்டத்திலே பாரதூரமான (Grievous) பாவங்கள் மன்னிக்கப்பட்டு ஒப்புரவு அளிக்கப்பட்டது. இறைமக்களின் சபையின் தலைவர்கள் இறைவனின் பிரதிநிதிகளாய்ப் பாவங்களை மன்னித்து, பாவம் செய்தோரை மீண்டும் மீண்டும் இறைவனோடு ஒப்புரவாக்கினார்கள். இப்புதிய ஒப்புரவாகுதலுக்குப் பாவங்களுக்காக வருந்துகின்ற மனநிலையும் பாவங்களுக்குப் பரிகாரமாக நல்ல செயல்களைச் செய்யவேண்டும் என்ற உறுதியும் வேண்டப்பட்டது.

தேற்றூலியனின் (Tertullian) கருத்துப்படி எல்லாப் பாவங்களும் ஆயர் அவர்களால் 'தலைமேல் கை வைத்தல்' என்னும் செய்கை மூலம் மன்னிப்பு உறுதிப்படுத்தப் பட்டது. இக்காலகட்டத்தில் பாரதூரமான பாவங்களுக்கும், அற்ப பாவங்களுக்கும் இடையில் வேற்றுமை காக்கப்படவில்லை. மாறாக சில பாவங்கள் பாரதூரமானவை என்ற அடிப்படையில் கருத்தில் கொள்ளப்பட்டன. கொலை, விபச்சாரம், பொய்ச்சாட்சி, களவுபோன்ற பாவங்கள் பாரதூரமானவையாகக் கரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தப்பட்டன. அத்துடன் இப்பாவங்களைச் செய்தவர்களுக்கு அவர்களுடைய நாளாந்த வாழ்வில் சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. உதாரணமாகத் திருமணம் செய்யாதவர்கள் திருமணம் செய்துகொள்வதற்குத் தடையும், திருமணம் செய்துகொண்டவர்கள் தாம்பத்தியவாழ்வைப் பூரணமாக அனுபவிப்பதற்கும் தடை விதிக்கப்பட்டன. இத்தகைய கட்டுப்பாடுகளால் இப்பாவங்களைச் செய்தவர்கள் இறைவனோடு ஒப்புரவாகி மீண்டும் ஒருபுதிய வாழ்வை ஏற்கப் பின்வாங்கினார்கள். எனவே 'ஒப்புரவாகுதல்' எனும் அருட்சாதனம் விதவைகளுக்கும், முதியோருக்கும் ஏற்ற ஒரு கருவியாக அமைந்தது.

## 4-ம், 5-ம், 6-ம் நூற்றாண்டுகளில் :

இக்காலகட்டத்தில் தன் பாவநிலையை உணர்ந்து வருந்தியவர்கள் தனிப்பட்ட முறையில் ஆயரிடம் சென்று தங்கள் பாவநிலையை வெளியிட்டார்கள். ஆயர் அவர்கள் இத்தகையோர் மீண்டும் ஒப்புரவாகுதலுக்கான காலத்தை நிர்ணயித்து, அக்காலகட்டத்தில் அவர்கள் தங்கள் தவறை உணரவைக்க வேண்டுமென்ற நோக்கோடு கடுமையான கட்டுப்பாடுகளும் ஆயரால் விதிக்கப்பட்டன. இதனால் இலகுவில் குறுகிய காலத்தில் ஒப்புரவாகுதல் அருட்சாதனத்தை இவர்களால் அடைய முடியவில்லை. இவர்கள் அத்துடன் திருவிருந்திலும் இருந்து ஒதுக்கப்பட்டு வைக்கப்பட்டார்கள். ஏனெனில் தங்கள் பாவங்களை இத்தகைய தொரு சூழ்நிலையில் உணர்ந்து மீண்டும் இறைவனோடு உண்மையாக ஒப்புரவாக வேண்டுமென்பதே இதன் நோக்கமாகும்.

பாரதூரமற்றவையாகக் கருதப்பட்ட பாவங்களுக்குப் பரிகாரமாகத் தருமம் வழங்கலும், விரதம் கடைப்பிடித்தல் போன்றவை நற்காரியங்களாகச் செய்யலாம் என்றும் கொள்ளப்பட்டன. ஆயரால் குறிப்பிடப்பட்ட காலகட்டத்தினுள் தன் குற்றத்தை உணர்ந்து பரிகாரம் தேடியபின்பு பாவநிலையை உணர்ந்தவர் (Penitent) கிறிஸ்தவ சமூகத்தில் மீண்டும் சேர்த்துக்கொள்ளப்பட்டனர்.

6-ம் நூற்றாண்டில் அயர்லாந்து துறவிகள் 'பாவமன்னிப்பு நூல்கள்' (Penetenial books) குறிப்பிட்டபடி பாவங்களுக்கு ஏற்றவிதத்தில் பரிகாரம் தேடும் வழக்கத்தை அறிமுகப் படுத்தினார்கள். (Tariff Penance) இம்முறையினால் ஒருவர் அதிக பணத்தைக் கொடுப்பதன் மூலம் உண்மையான பரிகாரத்திலிருந்து தப்பிக்கொள்ள முடியும். மேற் குறிப்பிட்ட நூலில் ஒவ்வொருவகையான பரிகாரங்கள் சேர்க்கப்பட்டிருந்தன. இத்தகைய ஒரு நிலையினால் ஒப்புரவாகுதல் அருட்சாதனத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தை அளிக்கின்ற குரு அல்லது ஆயர் மனிதனையும் இறைவனையும் இணைக் கின்றவராக இல்லாமல் வெறுமனே ஒரு நீதிபதியைப்போன்று செயல் படுவதாக இக்காலகட்டத்தில் கருதப்பட்டது. இக்காலகட்டத்தில் பாவமன்னிப்பும் பலதடவை அளிக்கப்பட்டும் அதேநேரத்தில பாவமன் னிப்பும் பரிகாரமும் நிறைவேற்றப்பட்டபின்பே அளிக்கப்பட்டது.

## மத்திய காலம்:

புளோரன்ஸ் சங்கம்: இச்சங்கம் ஒப்புரவாகுதல் ஓர் அருட்சாதன மென்றும் அது ஒரு பாவியின் மனம் வருந்தலையும் ஒரு குருவிடம் வாய் மொழிமூலமாகப் பாவங்களை அறிக்கையிடுவதையும், பாவமன்னிப்பு குருவினால் அளிக்கப்படவேண்டுமென்பதை உறுதிப்படுத்தியது. அத் துடன் இவ்வருட்சாதனம் பாவங்களுக்கு மன்னிப்பு அளிக்கும் சக்தி உண்டென்பதை ஏற்றுக்கொண்டது. சீர்திருத்தவாதிகளும் (Reformers) முக்கியமாக மாட்டின் லூதர் இச்சங்கத்தின் அறிவுரையை ஏற்றுக் கொள்ளவில்லை. லூதர் 'ஒப்புரவாகுதல்' ஒரு அருட்சாதனம் என்பதை ஏற்றுக்கொண்டாலும், கடவுளின் இரக்கத்தில் நம்பிக்கை வைப்பது எல்லாவற்றிலும்விட முக்கியமானதொன்று என்று நம்பினார். அத் தோடு குருமாருக்குப் பாவங்களை மன்னிப்பதற்கு வழங்கப்பட்ட அதி காரத்தை ஏற்றுக்கொள்ள மறுத்தார். கல்வியினும் தனிப்பட்ட ஒப்புர வாகுதலையும் பாவ மன்னிப்பையும் ஏற்றுக் கொள்ளக் கூடாது. 'ஒப்புர வாகுதல்' ஒரு அருட்சாதனம் என்பதை ஏற்றுக்கொள்ளவில்லை. இவர் களின் கருத்துக்கு எதிரொலியாக திரிதெந்தின் (Trent) சங்கம் ஒப்புர வாகுதல் எனும் அருட்சாதனத்தைப்பற்றி மிகவும் திட்டவட்டமாகச் சில விசுவாச உண்மைகளை எடுத்தியம்பியது.

1. இச்சங்கம் பாரதூரமான பாவங்களை வெளியில் அறிக்கை யிடுவது திருச்சட்டத்தின் வழிவந்ததாகும். (Divine Law) ஆனால் பாவத்தை வெளியிடும்முறை திருச்சரித்திரத்தில் இடம்பெறும் ஒன்றாகும். எனவே வெவ்வேறு முறைகளில் திருச்சபையின் சரித்திரத்தில் அளிக்கப்பட்டுவந்த ஒப்புரவாகு தல் அருட்சாதனம் கிறிஸ்துவின் நோக்கத்திற்கு முரணானது அல்ல.

2. பாரதூரமான குற்றங்களை விபரமாகச் சொல்லுவது திருச் சட்டத்தின் வழிவந்த ஒன்றாக எண்ணிக்கொண்டாலும் இச் சங்கம் இவ்வாறான விபரமாகப் பாவங்களை அறிக்கையிடு கின்ற வழியொன்றின்மூலம் மட்டுமே ஒப்புரவாகுதல் அருட் சாதனத்தைப் பெறலாம் என்பதைக் குறிப்பிடுவது இதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கமல்ல. வெவ்வேறு வழிகள்மூலம் இவ்வருட்சாதனத்தை சந்தர்ப்பத்திற்கும், சூழ்நிலைக்கும் ஏற்றவிதத்தில் பெறலாம்.

3. இச்சங்கம், பாவத்தைக் கேட்கும் குரு ஒரு நீதிபதி என்ற கருத்தில் அவரை நோக்கவேண்டும் என்று கருதுகின்றது. எனினும் சீர்திருத்தவாதிகளுக்கு எதிராக மேற்கொண்ட ஒரு கருத்தாகவே எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். ஏனெனில் இவர்கள் இறைவனின் வார்த்தையை வெறுமனே அறிக்கையிடுவதன்மூலம் பாவங்கள் மன்னிக்கப்படும் என்ற கருத்தை ஆதரித்தார்கள். அத்துடன் பாவங்களைக் கேட்கும் குரு ஒரு நோயாளிக்குப் பரிகாரம்தேடும் ஒரு வைத்தியரைப் போலக் கருதப்படும் கருத்திலே எடுக்கப்பட வேண்டும் என்று இச்சங்கம் கருதுகின்றது.

## 8-ம், 9-ம், 12-ம் நூற்றுண்டுகளில்:

இக்காலகட்டங்களில் பாரதூரமான — பகிரங்கமான பாவத்திற்குப் பகிரங்கமாகப் பரிகாரம் கொடுக்கும்நிலை இருந்தது. 12-ம் நூற்றுண்டின் இறுதிக் காலகட்டத்தில், பாவம்செய்த ஒருவர் தன் பாவத்தை அறிக்கையிட்டு ஏற்றுக்கொள்ளும் நிலை இருந்தது. எனவே ஒப்புரவாகும் அருட்சாதனத்தில் பாவத்தைத் தாஞக வெளியிட்டு ஏற்றுக் கொள்ளும்நிலை முக்கிய இடத்தை வகித்தது. பாவத்தை அறிக்கையிடுவதனுல் ஏற்படுகின்ற ஒருவித நண்பான உணர்வே முக்கியமாக வலியுறுத்தப்பட்டது. அதேநேரத்தில் மனம்வருந்தலும், பாவத்தை உணர்ந்ததினுல் ஏற்படுகின்ற துக்கமும் இக்காலகட்டத்தில் முதன்மையிடம் வகித்தன. பாவ மன்னிப்பும், பாவத்தை அறிக்கையிட்டபின்பு உடனடியாகக் கிறிஸ்துவின் பிரதிநிதியாக இருக்கும் குருவினுல் வழங்கப்பட்டது. பாவமன்னிப்பு வழங்கக் குருவானவர் இல்லாதவிடத்து, ஒரு ஒரு பாவி தனது பாவங்களைத் தனது நண்பனிடமோ அல்லது ஒரு பொதுநிலையினரிடமோ குதிரையிடமோ அல்லது தனது வாளிடமோ தனது பாவங்களை அறிக்கையிட முடியும். பாவத்தின் வெளியடையாளத்தை நிருபிப்பதற்காகவே இத்தகைய ஒருநிலை இருந்துவந்தது. 12-ம் நூற்றுண்டின் இறுதிக்கட்டத்தில் ஒப்புரவாகுதல் அருட்சாதனம் மூன்று வகைகளில் அளிக்கப்பட்டது. பகிரங்கமான — பாரதூரமான பாவங்களுக்குப் பாவமன்னிப்பும் பரிகாரமும் அளிக்கும் உரித்து ஆயருக்கு வழங்கப்பட்டது. இதனை ஆயர் ஒருதடவைமட்டும் தனது அதிகாரத்திற்கு உரித்து என்றவகையில் இதனை அளிக்கவும், இரண்டாவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாகப் பங்குக்குரு பகிரங்கமாக ஒருவருக்கு அவருடைய பாவத்திற்காகப் பாவப்பரிகார யாத்திரை ஒன்றை மேற்கொள்ள அனுமதிக்கலாம். இத் தகைய அனுமதி உதாரணமாகக் கொலை, ஆலயத்திற்கு உரித்தான பொருட்களைக் களவாடுதல் போன்ற பாவங்களுக்கு இத்தகைய ஒரு பரி காரத்தை அளிக்கலாம். மூன்றாவதாக, தனிப்பட்ட ஒப்புரவாகுதல் அருட்சாதனத்தில் பாவ மன்னிப்பும் பரிகாரமும் பாரதூரமான குற்றங் களுக்கும் அளிக்கப்பட்டன. இவ்வருட்சாதனத்தைக் குருக்களும், பொது நிலையினரும் பெற உரித்துடையவர்கள். நாலாவது, லத்தரன் சங்க ஏற்பாட்டின்படி தனிப்பட்ட ஒப்புரவு அருட்சாதனத்தைப் புத்தி விபரம் தெரிந்த ஒரு கத்தோலிக்கர் ஒரு வருடத்திற்கு ஒருமுறையாவது பெறவேண்டுமென்று வலியுறுத்தியது. அத்துடன் அளிக்கப்பட்ட பரி காரம் நிறைவேற்றப்பட வேண்டுமென்றும் மேலும் வலியுறுத்தப் பட்டது.

## 2-ம் வத்திக்கான் சங்கம்:

இச்சங்கம் 'ஒப்புரவாகுதல்' திருவருட்சாதனத்தின் திருச்சடங்கை மாற்றியமைக்கும்படி வேண்டுகோள் விடுத்தது. இத்திருவருட்சாதனத் தின் தன்மையை அறிந்துகொள்வதற்கும் அது ஏற்படுத்தும் தாக்கத் தைப் புரிந்துகொள்வதற்கும் வழிசெய்யப்பட வேண்டும் என்று வேண்டு கோள் விடுப்பதை திருச்சங்க ஏட்டில் " திருவழிபாடு" (Liturgy) என் னும் பகுதியில் காணலாம்.

(நம். 72) திருவருட்சாதனத்தின் நோக்கம் கடவுளின் இரக்கத்தை யும் மன்னிப்பையும் பெறுவதாகும். திருச்சபையோடு மீண்டும் ஒப்புர வாகுவதற்கும் அத்துடன் திருச்சபையானது தன்னுடைய அன்பினு லும், முன்மாதிரிகையாலும், செபத்தினாலும் பாவிகளின் மனந்திரும்ப லுக்கு ஒத்துழைப்பு நல்கவேண்டுமென்று திருச்சபை பற்றிய திருச்சங்க ஏடு எடுத்துக் கூறுகிறது.

## புதிய ஒப்புரவாகுதல் திருவழிபாட்டுச் சடங்கு:

புதிய ஒப்புரவாகுதல் அருட்சாதனம் திருச்சபையோடும் மனிதன் ஒப்புரவாகுதலையே முக்கியமாக வலியுறுத்துகின்றது. இவ்வருட்சாத னத்தை அளிக்கும் குரு, ஒரு நீதிபதி தீர்ப்புக் கூறுவதைப்போல் அல் லது ஒரு நோயைக் குணப்படுத்துபவராகச் செயற்பட வேண்டுமென் பதை இவ்வழிபாட்டுச்சடங்கு வலியுறுத்துகின்றது திருச்சபை பகிரங்க மாக அறிக்கையிடும் கிறிஸ்துவின் வார்த்தைகளின் தாக்கம் ஒருவர் மன மாற்றத்திற்கு அல்லது உளமாற்றத்திற்கு வழிகோல வேண்டும் என்பது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியமாகும். இத்திருவருட்சாதனத்தை இறைமக்கள் ஒரே குடும்பமாகக் கூடுகின்ற வழிபாட்டில் அளிப்பது வரவேற்கத்தக்கது. இவ்வருட்சாதன வழிபாட்டின்மூலம் திருச்சபையானது விசுவாசத்தை அறிக்கையிடுவதோடு மட்டும் நின்றுவிடாது, இறைவனுக்கு கிறிஸ்துமூலம் நமக்குக் கிடைத்த மீட்பிற்காகவும் நன்றி கூறுகின்றது. அத்துடன் திருச்சபையானது தனது வாழ்க்கையை இறைவனின் மகிமைக்கு ஏற்ற ஒரு ஆன்மீக பலியாகவும் ஒப்புக்கொடுக்கின்றது.

## முடிவுரை :

எனவே திருச்சபையின் வரலாற்றிலே 'ஒப்புரவாகுதல்' அருட்சாதனம் பல்வேறு வளர்ச்சி நிலைகளைத் தாண்டி இன்று தனிப்பட்ட ஒப்புரவாகுதல் மூலம் கடவுளோடும், திருச்சபையோடும் ஒப்புரவாகியுள்ளது. பாவங்களுக்கு மன்னிப்பு திருச்சட்டத்தின்படி வந்ததென்றும் பாவமன்னிப்பை வழங்கும் முறையைத் திருச்சபையானது வெவ்வேறு காலகட்ட சூழ்நிலைகளுக்கும் தேவைகளுக்கும் ஏற்றவிதத்தில் நிர்ணயிக்கலாம். இதன்மூலம் இவ்வருட்சாதனம் இறைமக்களுக்கு வெறும் சுமையாக இல்லாமல் மாறாக இறைமக்கள் இறைவனோடும் திருச்சபையோடும் ஒப்புரவாகுவதற்கு வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லை.

தொகுப்பு : R. C. X. நேசராசா
J. X. பேனுட்றெக்னே

# ஒப்புரவு அருட்சாதனம்

—அருள்திரு. கிறிஸ்ரியன் வாஸ்

மனிதன் தன்னோடும் இறைவனோடும் அயலவரோடும் ஒப்புரவாகின்ற ஒரு கொண்டாட்டமே ஒப்புரவு அருட்சாதனமாகும். இதனை நாங்கள் ஒப்புரவு சடங்கு என்றும், பச்சாத்தாபம் என்றும், பாவசங்கீர்த்தனம் என்றும் பெயரிட்டு அழைக்கின்றோம். இச்சடங்குகளை நாம் எப்பெயர் கொண்டு அழைத்தாலும் அதன் உள்ளே அடங்கியிருக்கின்ற உண்மை நிலை, மெய்யியல்பு ஒன்றுதான். அதாவது மனிதன், பாவத்தினால் உறவினில் முறிவை ஏற்படுத்திய மனிதன், உறவிலே இடைவெளியை அதிகரித்த மனிதன் தன்னோடும் அயலானோடும், இறைவனோடும் மறு உறவாகுதல், இறைவனின் இரக்கத்தை மனிதன் அனுபவிக்கின்ற ஒரு நிலை.

இவ்வருட்சாதனத்துக்கு கொடுக்கப்பட்டுவந்த பெயர்கள் அர்த்தம் பொதிந்தவையாகவே இருந்து வந்துள்ளன. இவை ஒப்புரவு அருட்சாதனத்தின் பல்வேறு அம்சங்களை வலியுறுத்தி நின்றன. அவ்வருட்சாதனத்துக்கு பாவத்தை உணர்ந்து மனம் வருந்துவது இன்றியமையாத பண்பு. அதனாலேயே இதனை பச்சாத்தாபம் என்று அழைத்தார்கள். பாவத்தை இதிலே அறிக்கையிடுவதாலே பாவசங்கீர்த்தனம் என்றார்கள். இரக்கம்நிறைந்த இறைவன் நம் பாவங்களை மன்னிக்கின்றார் என்பதினாலே பாவமன்னிப்பு எனப்பட்டது. உறவை முறித்துக்கொண்ட மனிதன் தன் உறவை செம்மைப்படுத்திக் கொள்வதினாலே இது ஒப்புரவு அருட்சாதனம் என வழங்கப்படுகின்றது.

ஆனால் இவ்வருட்சாதனத்தை அணுகுகின்றபோது நாம் பல்வேறு மனநிலைகளை கொண்டவர்களாக இருக்கின்றோம். சிலருக்கு இது கசப்பானதாகவும், மறுசாராருக்கு இவ்வருட்சாதனம் இல்லாத வாழ்வு கசப்பானதாகவும் இருக்கின்றது. இன்னும் சிலருக்கு சுமையாகவும் பலருக்கு சுமைகுறைக்கும் வழியாகவும், அருள்பெறும் ஊற்றாகவும் இது திகழ்கின்றது.

## பாவத்தின் தாக்கம்

பாவம் மனிதனை இறைவனிடமிருந்து பிரிக்கிறது. மனிதனுக்கும் இறைவனுக்கும் இடையே பாரிய இடைவெளியை ஏற்படுத்துகின்றது என்பதே முன்னைய காலத்து கருத்தாக இருந்தது. ஆனால் தற்கால

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனை வளர்ச்சி, பாவம் மனிதனை தன்னிலிருந்தும், மனிதனை மற்ற மனிதனிடமிருந்தும் அதாவது சமுதாயத்திலிருந்தும் பிரிக்கின்றது, என வலியுறுத்துகின்றது. மனிதன் தன்னிலே நிறைவடைய முடியாத செயலைச் செய்யும்போது தன்னிலிருந்து தானே பிரிக்கப்படுகின்றான். உதாரணம்: இன்னொருவனுக்கு தீங்கு விளைவிக்கும்போது தனக்கே ஒவ்வாத ஒரு சுபாவம் அவனை ஆட்கொள்கின்றது. அது கோபமாக இருக்கலாம்; எரிச்சலாக இருக்கலாம் எதுவாக இருந்தாலும் அது மனிதனை தனது சொந்த மனித சுபாவத்திலிருந்து பிரிக்கின்றது. அதேபோல் தன் அயலவனிடமிருந்தும் பிரிக்கப்படுகின்றான். இவ்விரு பிரிவுகளும் அவனை இறைவனிடம் உறவாட முடியாமல் தடுக்கின்றன. எனவே மனிதன் பாவம் செய்யும்போது மூவகைத் தொடர்புகளை துண்டிக்கின்றான். அதாவது தன்னோடும், அயலவனோடும், இறைவனோடும். எனவே அவன் அப்பாவ தாக்கத்திலிருந்து விடுபட தன்னோடும், அயலவனோடும், இறைவனோடும் ஒப்புரவாதல் வேண்டும்.

## ஒப்புரவாகும் சடங்கு பற்றிய திருச்சபையின் முன்னையநிலை

(திரிதெந்தின் சங்கம் 1545—1563)

திரிதெந்தின் சங்கம் மறுமலர்ச்சிக்காலத்திலே ஏற்பட்ட விசுவாச தளர்வுகளை நிவர்த்திசெய்ய, திருச்சபையை புரட்சிவாதிகளின் பிடியிலிருந்து பாதுகாக்க, தற்பாதுகாக்க கூட்டப்பட்ட சங்கமாகும். இச் சங்கம் பாவசங்கீர்த்தனம் பற்றிய சில கோட்பாடுகளை வலியுறுத்தியது. பாவமன்னிப்புச் சடங்கு :

(1) மனம் வருந்துதல்

(1) பாவ அறிக்கை

(3) மன்னிப்பு வழங்கல்.

என்ற மூன்று அம்சத்துக்குள் அடக்கப்பட்டது.

### மனம் வருந்துதல்

பாவி தன் உறவை இறைவனுடன் துண்டித்ததையெண்ணி உத்தம மனஸ்தாபப்படுதல். பாவத்தின் விளைவுகளை உணர்ந்து, பாவ சந்தர்ப்ப சூழ்நிலைகளை முற்றாக ஒதுக்கிவாழ, பாவச்செயல்களிலிருந்து விடுபட அதன்மூலம் ஒரு புதுவாழ்வுக்கு தன்னைத் தயார் படுத்திக் கொள்ள உண்மையான மனம் வருந்துதலே இம்முதல் அம்சமாகும். இவ்வாறு மனம்வருந்தும் பாவி மீண்டும் பாவம் செய்வதில்லையென பிரதிக்கினை யெடுக்கின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பாவ அறிக்கையிடல்**

உத்தம மனஸ்தாபப்பட்டு இனிமேல் பாவம் செய்வதில்லை என்ற பிரதிக்கினையுடன் பாவி தன் பாவங்களைப் பாவசங்கீர்த்தனத் தொட்டியில் இறைவனின் பிரதிநிதியாக இருக்கும் குருவிடம் அறிக்கையிடுகிறான்.

**மன்னிப்பு வழங்கல்**

அவனுடைய பாவங்களைக்கேட்டு அதற்கு தேவையான வழி நடத்துதல்களைக் கூறும் குரு "பிதா, சுதன், பரிசுத்த ஆவியாகிய மூவரின் பெயராலும், கிறிஸ்துவின் மீட்புச் செயலின் வல்லமையாலும்" அவனுக்கு மன்னிப்பு வழங்குகின்றார். பாவமன்னிப்பு வழங்குவதோடு பாவங்களுக்கான பரிகாரத்தையும் குறிப்பிடுகின்றார்.

**பாவப் பரிகாரம்**

மேலும் பாவப் பரிகாரம் பற்றிய கருத்துக்களும் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. பாவப்பரிகாரச் செயல் செய்யும்படி பாவியைக் கேட்க குரு கடமைப்பட்டுள்ளார். பாவத்திலே பிறரோடு பங்காளியாகாதபடி இருக்கவும், உள்ளத்தில் பாவத்திற்கு உடன்பட்டுப்போகாமல் இருக்கவுமே பாவப்பரிகாரச்செயல் புரியும்படி ஒருவர் கேட்கப்படுகின்றார். பாவப்பரிகாரச் செயலானது அவனுடைய ஆத்துமத்தை குணப்படுத்துவதோடு, அவன் பாவத்தின் காரணத்தை உணரவும், பாவப் பழக்கங்கள் மட்டில் எச்சரிக்கையாக இருக்கும்படியும் செய்கின்றது.

## திரிதெந்தின் கருத்து—ஒரு மதிப்பீடு

திரிதெந்தினில் கொடுக்கப்பட்ட முறைமையே பல நூற்றாண்டுகளாகக் கையாளப்பட்டு வந்துள்ளது. பாவங்களை பட்டியல்போல சொல்லி முடித்துவிடுகின்ற தன்மையையும், பாவத்தை உணர்ந்து மனம் வருந்தாமலிருப்பதும் நடைமுறையில் உண்டு. சுருங்கக் கூறுவதாயின் இச்சங்கத்திலே கொடுக்கப்பட்ட முறைகள் கடைப்பிடிக்கப்பட்டன எனக் கூறினாலும் அவை முழுமையானதாக இருக்கவில்லை என்பது உண்மை. இச்சடங்கின் எல்லாமுறைகளும் உரியமுறையில் நடைமுறைப்படுத்துவது வலியுறுத்தப்படவில்லை இம்முறையிலே இறைவனின் இரக்கத்தை அறிவித்து மனமாற்றத்தை தூண்டவல்ல இறைவார்த்தைக்கு அங்கே இடமிருக்கவில்லை. பாவங்களை சாவான பாவமா இல்லையா என்று ஆராய்வதிலும், என்ன பாவத்துக்கு என்ன தண்டனை வழங்கவேண்டும் என்பதிலுமே கவனம் செலுத்தப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரு தீர்ப்பு வழங்கும் ஒரு நீதிபதிபோல் செயலாற்றினர். பாவ மன்னிப்புச் சடங்கு பாவமன்னிப்பு வழங்கும் வெறும் இயந்திரமாக செயல்பட்டு வந்தது. இத்தகைய குறைகளை நிவர்த்திசெய்து 2-ம் வத்திக்கான் பொதுச்சங்கம் ஒப்புரவு பெறும் பொதுச்சடங்கை அறிமுகம் செய்தது.

## 2-ம் வத்திக்கான் சங்கத்தின் பின் ஏற்பட்ட புதிய மாற்றம்

இரண்டாம் வத்திக்கான் சங்கத்தில் இவ்வருட்சாதனம் புதிய வடிவத்தைப் பெற்றது. புதிய முறை என்கின்றபோது இவ்வருட்சாதனம்பற்றிய இறையியல் மாறிவிட்டது என எண்ணிவிடக் கூடாது. இதன் இறையியல் மாறவில்லை, ஆனால் அதன் வடிவமும் ஒப்புரவை அனுபவிக்கும் முறையும் மாறியுள்ளது.

புதிய முறையானது உண்மையான மனமாற்றத்தையும், இறைவனுக்கு ஒருவன் தன்னையே முழுமையாக அர்ப்பணிப்பதையும் வலியுறுத்துகின்றது. மனமாற்றமானது இதயத்தின் ஆழத்திலே ஏற்படும் உண்மையான மனஸ்தாபத்தின் அடிப்படையில் உருவாகவேண்டும். அது மட்டுமல்ல செய்த பாவங்களை எதிர்காலத்தில் செய்வதில்லை என்ற மனஉறுதியோடு வெறுக்கவேண்டும். ஒரு முழுமையான மனமாற்றத்தை வாழ்வினில் கடைப்பிடிக்கவேண்டும் (புதிய முறை ஒப்புரவு அருட்சாதனம் இல 6). மேலும் புதிய முறையானது பாவம் செய்தவன் உண்மையான மனஸ்தாபப்பட பாவமன்னிப்பு அளிப்பவர் உதவவேண்டும் எனக் கூறுகின்றது. இவ்வருட்சாதனத்தின் மூலம் பாஸ்கா மறைபொருள் மீண்டும் செயற்படுத்தப்பட வேண்டும் என நினைவூட்டுகின்றது.

பாவம் நிறைந்த உலகை கிறிஸ்துவில் ஒப்புரவாக்க திருச்சபை ஒப்புரவின் அருட்சாதனமாக விளங்குகின்றது. இந்த உண்மையின் அடிப்படையில் புதிய முறை ஒப்புரவு அருட்சாதனம் கட்டி எழுப்பப்பட்டுள்ளது. இத்திருச்சபையின் அங்கத்தவர்கள் கிறிஸ்துமூலம் இறைவனோடும் தன்னோடும் அயலவனோடும் ஒப்புரவாகின்றான்.

இதிலே தனிநபர் ஒருவரை ஒப்புரவாக்கும் சடங்குமுறை, தனித் தனியான பாவஅறிக்கையுடன் பலரை ஒப்புரவாக்கும் சடங்குமுறை பொதுப்பாவ அறிக்கையுடன் பலரை ஒப்புரவாக்கும் முறை என மூன்றாகப் பிரிக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்புதிய முறையிலே,

1. குருவே தானாக முன்வந்து பாவியை வரவேற்கின்றார். இறைவன் பாவியை தானாகவே முன்வந்து தன்பால் அழைக்கின்றார் என்ற உண்மை இதில் விளங்குகின்றது.

2. மனமாற்றத்தை தூண்டவல்ல இறைவார்த்தை வாசிக்கப்படுகின்றது. இதன்மூலம் பாவி தன் நிலையை உணரவும் இறைவனின் இரக்கத்தில் நம்பிக்கை கொள்ளவும் ஆழமான மனமாற்றத்தை அடையவும் தூண்டுகோலாக இது அமைகின்றது.

3. குரு பாவியின் தலைமீது கைவைத்து செபிப்பது தூய ஆவியானவரைப் பெற்றுக்கொள்வதைக் குறிக்கின்றது. இது ஆதித் திருச்சபையில் ஏற்பட்ட ஒரு பழக்கம். கிறிஸ்துவின் குணமளிக்கும் சக்தியின் அடையாளமாகவும் திகழ்கின்றது.

இந்த மூன்று அம்சங்களும் புதிய சடங்கு முறையின் சிறப்பு அம்சங்களாகும். இச்சடங்கு முறையின் முழுவடிவத்தை பின்வரும் பகுதி சுருக்கமாக எடுத்துக்காட்டுகின்றது.

I

# மனந்திரும்பும் ஒருவரை ஒப்புரவாக்கும் சடங்குமுறை

## மனந்திரும்புவோரை வரவேற்றல் :

— மனந்திரும்புபவர் பரிசுத்தஆவியின் அருள் வேண்டல்

— ஆத்தும சோதனை

— குருவுக்கு வணக்கம்

— குரு வாழ்த்துக் கூறி வரவேற்றல்

— இருவரும் சிலுவையடையாளமிடல்

— கடவுள்மீது நம்பிக்கை கொண்டு மனந்திரும்ப குரு அழைத்தல்

## திருநூல் வாசகம் :

இறைவனின் இரக்கத்தை அறிவித்து மனமாற்றத்தை தூண்டுவதாய் இருக்கவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பாவஅறிக்கை, பரிகார ஏற்பு :**

— மனந்திரும்புவோர் மனத்துயரை வெளியிட குரு அழைத்தல்
— மனந்திரும்புவோர் பாவங்களை அறிக்கையிடல்
— அறிவுரை, மனம்வருந்தத் தூண்டல்
— தவமுயற்சியை குறிப்பிட்டு, மனத்திரும்புவோர் அதைப் பாவ பரிகாரமாகவும், வாழ்வைத் திருத்தும் வழியாகவும் ஏற்றல்.

**மனந்திரும்புவோரின் செபம் :**

மனத்துயரை வெளியிட குரு அழைத்தல்
— மன்னிப்பு வேண்டல்

**பாவ மன்னிப்பு :**

— மனந்திரும்புவோர் தலைமீது குரு தம் கைகளை (அல்லது வலக் கை) நீட்டி சொல்வது :

குரு : இரக்கம் நிறைந்த தந்தையாகிய இறைவன், தம் திருமகனின் இறப்பினாலும் உயிர்ப்பினாலும், உலகத்தைத் தம்மோடு ஒப்புரவாக்கிய இறைவன் பாவமன்னிப்புக்காகப் பரிசுத்த ஆவியைப் பொழிந்தருளிய இறைவன், திருச்சபையின் திருப்பணி வழியாக உமக்கு மன்னிப்பும் சமாதானமும் அருள்வாராக. நானும் பிதா சுதன் பரிசுத்த ஆவியின் பெயரால் உம் பாவங்களிலிருந்து உம்மை விடுவிக்கின்றேன்.

மன : ஆமென்,

இறைபுகழ் கூறி மனந்திரும்புவோரை அனுப்புதல். (முடிவுச் சடங்கு)

# II

# பலரை ஒப்புரவாக்கும் சடங்குமுறை

**தொடக்கச் சடங்கு :**

— மக்கள் கூடியிருக்க குரு வருகை
— பொருத்தமான பாடல்
— குரு வாழ்த்துதல்
— சடங்கின் உட்பொருள், காரணம், முக்கியத்துவம், சடங்குமுறை, சுருக்கமாக விளக்கப்படல்.
— செபம் (மௌனமாகவும், பொதுவாகவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறைவாக்கு வழிபாடு :

— பொருத்தமான வாசகம்

— மறையுரை

(மனந்திரும்பி இரக்கம் பெற)

## ஆத்தும சோதனை :

— எல்லோரும் ஆத்தும சோதனை செய்யவும்

மனவருத்தத்தை உருவாக்கவும்

தேவையான அமைதி நேரம்.

— ஆத்துமசோதனை செய்ய உதவல்.

## பொதுப் பாவ அறிக்கை :

பாவஅறிக்கைக்கு அழைப்பு

— குரு : எல்லாம் வல்ல இறைவனிடமும்.................................

— மன்றாட்டு

— பரலோக மந்திரம்

— குருவின் செபம்.

## தனிப்பாவ அறிக்கையும், பாவமன்னிப்பும் :

— மனம் திரும்புபோர் தனியாகக் குருவை அணுகி பாவங்களை வெளியிட்டு பொறுத்தல் கேட்டல்

— குருவின் அறிவுரை அபராதம் பெறல்

— தலைமீது கை வைத்துப் பாவமன்னிப்பு அளித்தல்

குரு : இரக்கம் நிறைந்த.................................

மன : ஆமென்.

## இறுதிப் புகழுரை :

— இறைவனுக்கு நன்றிகூற, நல்வாழ்வு வாழ பணியாளர் தூண்டல்

— புகழ்ச்சிப் பா

— முடிவுச் செபம்.

## புதிய முறையும் புதுப்பித்தலும்

இந்தப் புதிய முறை, வாழ்வில் ஒரு புதுப்பித்தலை ஏற்படுத்துமா? ஒரு மாற்றத்தை கொண்டுவருமா என்ற கேள்வி எழுகின்றது. அதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையான பண்பை அர்த்தத்தை புரிந்துகொண்டு பங்குபற்றுகின்ற போது நிச்சயம் நம் வாழ்விலே ஒரு மாற்றத்தை, புதுப்பித்தலைக் கொண்டுவரும். அதை நாம் அடைவதற்கு பின்வரும் அம்சங்கள் அவசியம்.

1. ஒப்புரவு அருட்சாதனத்தின் இறையியல் பற்றியும், சடங்கு முறை பற்றியும் ஆழமாகச் சிந்திக்கவேண்டும். ஒரு புதிய கண்ணேட்டம் வேண்டும். இதற்கு சரியான போதனை மக்களுக்கு கொடுக்கவேண்டும்.

2. செபமும் தூய ஆவியானவரின் துணையும் அவசியம்,

இவ்வருட்சாதனத்தில் பெற்ற, இறைவனின் மன்னிப்பை நம்மிடையிலே காட்டாவிட்டால் நாம் சாட்சி பகராவிட்டால் இது அர்த்தமற்றதாகிவிடும். எனவே நம்வாழ்வின் மூலம் இறைவனின் எல்லையில்லா அன்பினை இரக்கத்தை எண்பிப்போம்.

## ஒப்புரவு அருட்சாதனத்திலே குரு

ஒப்புரவு அருட்சாதனம் என்முல் இறைவனின் இரக்கத்தை கொண்டாடும் ஒரு நிகழ்ச்சி. இதிலே குரு தீர்ப்பிடுபவராக அன்றி இறைவனின் இரக்கத்தை பாவி அனுபவிக்க உதவும் ஒரு கருவியாக செயல் படுகின்முர். தாமே வாழ்த்துக்கூறி வரவேற்கின்முர். இங்கே இறைவனின் இரக்கத்தை காட்டுகின்முர். எனவே இறைவனின் இரக்கத்தை அனுபவிக்கவல்ல ஒரு சூழலை குருவானவர் உருவாக்கவேண்டும்.

இவ்வருட்சாதனம் இறைவனின் இரக்கத்தை கொண்டாடுகின்ற ஒரு நிகழ்ச்சியாக திகழ்வதோடு அவரின் குணமாக்கும் சக்தியை அனுபவிக்க வாய்ப்பளிக்கின்ற குணமாக்கும் வழிபாடாகவும் திகழ்கின்றது. எனவே குரு தகுந்த ஆயத்தம் செய்ய வேண்டும், செபிக்கவேண்டும், மக்களையும் இவ்வாறு ஆயத்தம் செய்தல் அவசியம். ஊதாரிப்பிள்ளை உவமையிலே அந்தத் தந்தையானவர் மகன் தொலைவிலே வருவதைக் கண்டு மனமுருகி ஓடி கட்டி அணைத்து, முத்தமிடுகின்முர். இங்கே ஒரு எல்லையில்லாத அன்பைக் காண்கின்ருேம். தந்தையின் மனநிலை குருவுக்கும் அவசியம். பாவியை அவன் குறைகள் பலவீனங்களுடன் ஏற்று அன்பு செய்யும் மனப்பக்குவம் வேண்டும். குருவும் பாவியும் சேர்ந்து இறைவனின் இரக்கத்தை அனுபவிக்கின்ற சூழ்நிலை வேண்டும். எனவே பாவியின் பாவச்செயல்களில் மட்டும் அதிகம் கவனம் செலுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதாக மட்டும் இருந்து விடாமல் இறைவனின் இரக்கத்தை அனுப விக்க வழிவகுக்க வேண்டும். தந்தையிடம் வருமுன் ஒரு பேச்சுத் தயாரிக்கின்றான் மைந்தன். ஆனால் தந்தையின் எல்லையில்லாத அன்பு அவனை ஏற்றுக்கொள்கின்றது. மைந்தன் தயாரித்த பேச்சிற்கு அங்கே இடமில்லாமல் போய்விடுகின்றது. இவ்வாறே பாவியை ஏற்கின்ற பண்பு அன்பு குருவிடத்திலிருக்கவேண்டும்.

மேலும் ஒழுக்க நெறிபற்றிப் போதிக்கவோ, மனச்சாட்சியை உருவாக்கப் பயன்படும் ஒரு சந்தர்ப்பமாக இவ்வருட்சாதனக் கொண்டாட்டம் அமைந்துவிடக் கூடாது. இறைவனின் இரக்கத்தை குணமளிக்கும் வல்லமையை, எல்லையில்லாத அன்பை அனுபவிக்கும் ஒரு புனித நிகழ்ச்சியாக விளங்கவேண்டும். ஒருவனின் பாவத்திலும் அவனுடைய பலவீனங்கள், சிக்கல்கள் என்பனவற்றின் மத்தியிலும் இறைவன் அன்பு செய்கின்றார் என்பதை அவன் உணர்வதற்கு வாய்ப்பளிப்பதாக இருக்கவேண்டும். குருவின் பாவ மன்னிப்புச் செபமானது பாவியின் மன்னிப்பை நிறைவுசெய்யும் ஒன்றாக விளங்குகின்றது. பாவத்தை மன்னிப்பவர் இறைவன். இங்கே திருச்சபையூடாக குரு மூலம் தன் மன்னிப்பை வழங்குகின்றார்.

## பெறுநரின் பங்கு

இவ்வருட்சாதனத்தை அணுகுகின்றபோது இறைவனின் குரலுக்கு செவிசாய்த்து இறைவனின் இரக்கத்தை அனுபவிக்கச் செல்கின்றேன் என்ற மனோநிலை அவசியம். பாவச்செயலை வெளியிடுவதல்ல, பாவத்தின் அடிப்படையைக் கண்டறிந்து அதனைக் குருவிடம் வெளியிடவேண்டும். உண்மையான உளமாற்றமடைய இது முக்கியமானதொன்றாகும். இதிலே ஆவியானவரின் அருள் எமக்கு துணைபுரிகின்றது. பாவமன்னிப்புப் பெற்றவன் உண்மையான உளமாற்றமடைந்து தன் வாழ்வின் மூலம் அதனை எண்பித்து பிறரோடு பகிர்ந்துகொள்ள வேண்டும். அன்றேல் அது ஒரு நிறைவில்லாத ஒரு கொண்டாட்டமாக மாறிவிடும்.

## முடிவுரை

ஒப்பரவு அருட்சாதனம் பற்றிய மேற்குறிப்பிட்ட விளக்கங்கள் மக்களிடையே போதியளவு தெளிவு படுத்தப்பட அனைத்து கிறிஸ்தவர்களும் அதாவது குருக்கள், கன்னியர், மறை ஆசிரியர்கள், பொது நிலையினர் அனைவரும் ஈடுபடவேண்டும். அப்பொழுதுதான் இறைவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னின் இரக்கத்தை நாம் பெறுவதோடு அதை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்பவர்களாகவும் மாறமுடியும். இறை இரக்கத்தை மற்றவர்களிடையே பரப்பும் சாதனங்களாக நாம் மாற வேண்டும். அதற்கு நாம் ஒப்புரவுபெற்ற, ஒப்புரவு வாழ்வு வாழும் மக்கள் என்பதை நம் வாழ்க்கை மற்றவர்களுக்கு வெளிப்படுத்தி நிற்கவேண்டும். இதற்கு நாம் உண்மையில் நம்மோடும், அயலவரோடும் அதன்மூலம் இறைவனோடும் ஒப்புரவு வாழ்க்கை வாழ்வதன் மூலம் சமாதானத்தின் கருவிகளாக வேண்டும். இச்சமாதானம் நிறைவுள்ளதாக உலகமனைத்திலும் பரவும்போது இறையரசு நிறைவுபெறும் என்பது திண்ணம்.

தொகுப்பு : இ. ஸ்டாலின்

அ. சகாயதாசன்

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org